# காஞ்சி

20 காசு

13-7-69 நிறுவனர்: அண்ணாதுரை

5-52

உள்ளே...

★

மூவர் முரசு (மடல்)

துணிவான நடவடிக்கை (தலையங்கம்)

நெறஞ்ச மனசு! (சிறுகதை)

சமுதாயச் சிந்தனைகள்!

கேட்டீரா சேதி?

கேள்வி-பதில்



## கேட்டீரா! சேதி!

தஞ்சை மாவட்டத்துக்கு, அண்மையில் மேற்குவங்க துணை முதலமைச்சர் ஜோதிபாசு வருகை தந்து ஒரு விழாவில் கலந்துகொண்டபோது 'செங்காவலர்' என்று பெயர் சூட்டிக்கொண்டுள்ள ஒரு கூட்டம், போலீசார் தம் கடமைகளை ஆற்ற முடியாதவாறு தடுத்து, அக்கடமைகளைத் தாங்களே ஆற்ற முன்வந்ததாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அரசின் மீதும், அதன் அதிகாரத்தின்மீதும் நிர்வாகத்தின்மீதும் நம்பிக்கை இல்லாது இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதா? அல்லது அராஜகத்துக்கு வித்தூன்ற வேண்டும் என்ற அடிப்படை எண்ணமா? என்ற வினுவுக்குரிய விடையாக, இக்கிழமை ஜனசக்தி இதழ் ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதாவது, நாட்டவர்களது உயிருக்கு அவர்களே இனி பாதுகாப்புத் தருவார்களாம்! அதன்முன்னேட்டம்தான் அதுவாம்! இடது கம்யூனிஸ்டுகள் சீனுவில் உள்ள செங்காவல் படையைப் போன்று, இந்த நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கிவிட்டார்கள். இதே போல ஒரு படையை நிரந்தரமாக அமைக்கும் நோக்கத்துடன் வேலூரில் சில இடதுசாரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. தஞ்சை மண்ணில் நடத்திய தறுதலைத்தனத்தை, தரணியெங்கும் நடத்த முன்வரப்போகும் அரசியல் அராஜகத்தை முளையிலேயே கிள்ளியெறிய அரசு முன்வரவேண்டும். அப்புறம் தும்பைவிட்டு, வாலைப் பிடிக்க நினைப்பது, சிவசேனை அட்டூழியத்தை மத்திய அரசே திரைப்படமெடுத்து மக்களுக்கு அறிவிக்க முன்வருகின்ற பைத்தியக்காரத்தனத்துக்கு ஒப்பானதாகத்தானிருக்கும்!

* * *

ஆசிரியப் பெருமக்களிடையே நிலவும் வேலையில்லாமையைப் போக்குவதற்கென்று ராஜஸ்தான் கல்வித்துறை, துணிகரமான முறையில் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இப்போது மாநிலத்திலுள்ள சுமார் ஒன்பது ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமானுல், நடப்பு ஆண்டுகளில் யாருக்கும் புதிதாக ஆசிரியப் பயிற்சி தருவதை நிறுத்தவேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. புதிய பயிற்சி அளிப்பதை நிறுத்துவதன் மூலம், மூன்று ஆண்டுகளில் ஆசிரியர்களது வேலையின்மையைப் போக்கிவிட முடியும் என்றும் அது நம்புகிறது. இதுபோலவே தமிழகத்தில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் மட்டும் சுமார் 20,000 பேர் வேலையற்றிருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அடுத்த ஆண்டில் இன்னும் 9,000 பேர் பயிற்சி முடிந்து வெளிவரக்கூடும் என்றும் நம்பப்படுகிறது. இந்நிலையில், ஆண்டுதோறும் கல்வி விஸ்தரிக்கப்பட்டும், வேலையில்லாதோரும் கூடவே அதிகமாகிக்கொண்டு வருகிருர்கள். இதுபற்றித் தமிழக அரசு உரிய கவனம் எடுத்துக்கொண்டால் நல்லது. ராஜஸ்தான் போலவே, தமிழ் நாடும், சில குறிப்பிட்ட காலத்துக்கு இந்தப் பயிற்சியை நிறுத்திவிட்டு, தேவைப்படும் துறைக்கான பயிற்சிக்கு அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். வேலையற்றிருக்கும் ஆசிரியர்கள் ஒன்றுபட்டு இதற்கான குரல் கொடுத்தால்தான் நல்லது.

* * *

உலகில் இப்போது எத்தனை மொழிகள் உயிருடன் இருக்கின்றன என்பதற்கு ரஷ்யாவில், ஏடொன்று சர்வே நடத்தி செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்திய அரசு, இந்தியின் உயர்வைக்காட்ட எத்தனையோ சிறு மொழிகளையும் துணை மொழிகளையும் கபளீகரம் செய்து வருவதைப்போல், ரஷ்யாவுக்குக் கிடைத்த தகவல்களில் விடுபட்டவைகள் இருக்கக்கூடுமென்ருலும், அது தந்திருக்கிற தகவலின்படி 2796 மொழிகள், மக்களால் பேசப்படுகிறதாம். 5 கோடி மக்களுக்கு மேல் பேசப்படும் மொழிகள் 13; அதாவது சீனம், இந்தி, உருது, ஆங்கிலம், ஸ்பானிஷ், இரஷ்யா, ஜெர்மன், ஜப்பான், போர்த்துகிஸ், பிரெஞ்சு, அரபி, வங்காளி, இத்தாலி என்பவைகளாம். இவை 13 மொழிகளும் 65 நாடுகளால் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகும். இந்த பதின்மூன்றிலும் 6 மொழிகள் மட்டும் ஒருவருக்குத் தெரிந்திருந்தால், அவர், மனிதகுலத்தின் 30 சதவீத மக்களுடன் தொடர்புகொள்ள முடியுமாம்! இந்திய அரசுக்குக் கசப்பானதகவல் இது. இந்தி ஒன்று தெரிந்தால் இந்தியத்துணைக்கண்டம் முழுவதும் தொடர்புகொள்ள முடியுமே என்று கூற அது முன்வரக்கூடும். உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் மட்டும் என்பது தெரியாதா? என்றுகூட அதுகேட்கும்! என்ன செய்வது, ரஷிய ஏடு இவையெல்லாம் தெரியாமல் சர்வே எடுத்துவிட்டதே!

* * *

"தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்! ஒற்றுமையே நமது இலட்சியம்! நாம் ஒன்றுபட்டிருநதால் மட்டுமே, நமது கோரிக்கைகள் நிறைவேறமுடியும். இப்போது நமக்குத்தேவை கூலி உயர்வு! பண முதலைகளைப் பாருங்கள்! பங்களாவுக்குமேல்பங்களா! ஒன்றையடுத்து இன்னென்று! கும்பி காய்ந்து கிடக்கிரும் நாம்; கும்மாளம் அடித்துக்கொண்டிருக்கிருன் அவன்; நாம விளைத்துக்கொடுக்கிரும்; அவன் அறுத்துக் களிக்கிருன். நாம் விளைவித்தது நமக்கே சொந்தம்! கூலி உயர்வு வேண்டும்! அதுவும்கேட்ட அளவுக்கே வேண்டும்! கொடுக்கும் வரையில் யாரும் வயிலில் இறங்கக்கூடாது; எவரும் எந்த வேலையும் செய்யக்கூடாது. இது தான் கட்சிக்கட்டுப்பாடு! தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்று பேசிக்கொண்டிருந்தார் ஒரு கம்யூனிஸ்டு பிரசங்கி. ஒரு வாரத்துக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்துவிட்டு, அதன் எதிரொலியாகப் பசியோடும் பட்டினியோடும் பரதவித்துக் கொண்டிருந்தனர் விவசாயத் தொழிலாளர்கள். இந்தப் பேச்சு, அவர்களது பசியைப் போக்கவில்லை. மாருகக் கிளறியே விட்டது. எங்கே அந்த தலைவர்? என்ற குரல் கூட்டத்திலிருந்து! எங்கள் வாழ்வையும், வளத்தையும் அழிக்க வந்த அவர் எங்கே? மீண்டும் குரல்! கூட்டம் மேடையைச் சூழ்ந்தது! பேச்சாளரோ தலைதெறிக்க ஓடித் தப்பினுர்! எங்கே என்று திகைக்கவேண்டாம்! நமக்கு அருகே தான்! கேரளாவில்தான்!! பாலக்காட்டை யடுத்த நெலப்பள்ளி என்ற இடத்தில்தான்! தமிழகத்திலும் விரைவில் இப்படி எதிர்பார்க்கலாமில்லையா!



**பெருமை உடையார் பணி!**

செய்யப்படுவனவற்றில், மிகவும் கடுமையானவை என்று மதிக்கத்தக்க செயல்களையே பெருமை உடையவர்கள் என்று போற்றப் படுவோர் செய்வார்கள். —குறள் (867)


காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 13—7—69 | இதழ் 52


# துணிவான நடவடிக்கை!

தமிழக அரசு, சென்ற கிழமை ஒரு துணிகரமான செயலைச் செய்திருக்கிறது. அதாவது தமிழகத்துக்குள்ளேயே ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நெல்—அரிசி கொண்டுபோக—வர விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றி தாராளப் போக்குவரத்துக்கு வழியுண்டாக்கி விட்டிருக்கிறது.

இப்போது தமிழகத்தில் பலமாவட்டங்களில் கடும் வறட்சிநிலை நீடித்துக்கொண்டிருப்பதுடன், உணவுப் பொருள்களின் விலையும் மேலே உயர்ந்துகொண்டே வருகிறது. இப்போதைய இந்த உத்திரவின் மூலம், விலை குறைய வழியேற்படும் என்பதுடன் தட்டுப்பாடு நிலைமையும் மாறக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறபோதுதான், அதற்குக் கட்டுப்பாடு விதித்து பரவலான முறையில் அது கிடைக்க வழி ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் தட்டுப்பாட்டை நீக்குவதற்குரிய வழியாக கட்டுப்பாடுகளை அகற்றிவிடுவதென்பது அசாதாரணமான துணிச்சல்தான்.

கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த குறுகிய காலத்துக்குள், அது இந்த நாட்டு மக்களது நல்வாழ்வுக்காகச் செய்திருக்கின்ற பொது நன்மைகள் ஏராளம். ஆனால், அது சந்தித்திருக்கின்ற தடைகளோ அதைவிட ஏராளம். 1965,66 முதலே தமிழகத்தில் வறட்சி நிலை முளைவிடத் தொடங்கிவிட்டது. உணவுப் பொருட்களின் உற்பத்தி முழுதுமாக முடங்கிவிடத் தக்க அளவுக்கு பருவநிலை மாறிப் போய்விட்டிருக்கிறது. 1967ல் மட்டும் கொஞ்சம் நம்பிக்கைத் தரக்கூடிய நிலைமை யேற்பட்டாலும், அடுத்து 68, 69ம் ஆண்டுகள் மிகவும் பயங்கர நிலையைத் தோற்றுவித்துள்ளன. இந்த நிலையில், அரசின் கடுமையான முயற்சி காரணமாகத் தீவிரச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, வறட்சியின் கடுமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தியில்—சிறப்பாக நெல்மணிகளைப் பொருத்தமட்டில் 5ல் ஒரு பகுதியை மட்டுமே, அதாவது 20 சதவீத உற்பத்தியையே அரசு கொள்முதல் செய்வது என்றும், பாக்கி 80 சதவீதமும் இஷ்ட விலைக்கு விற்றுக்கொள்ளும் வாய்ப்பாகவும்விட்டுவிட்டிருந்தும், நாட்டில் பரவலாக அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதற்கான முக்கிய காரணம், தமிழகத்துக்கு வெளியே கடத்தப்படுவது; அல்லது நாட்டுக்குள்ளேயே பதுக்கப்படுவது என்பதாகத் தானிருக்க முடியும்.

இந்த அடிப்படை நம்பிக்கையின் பேரில்தான் அரசு, இப்போது தடைகளை அகற்றி இருக்கிறது. இதன் மூலம், பதுக்கப்படும் உணவுப் பொருள்கள் தாராளமாக புழக்கத்துக்கு வரவும், தாராள புழக்கம் காரணமாக விலை குறையவும் வழியுண்டு என்றும் நம்பப்பட்டிருக்கிறது.

அரசின் இந்த உத்திரவை, வணிகத் துறையிலிருப்போர், பெரும்பாலும் வரவேற்றிருந்தாலும், விலை குறைய இது நல்வாய்ப்பாக அமையுமா? என்ற அச்சத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆட்சியில் அமர்ந்திருப்போர் உத்திரவுகளைப் போடத்தான் முடியுமே ஒழிய, ஒவ்வொரு துறையிலும் தாமே நேர்முகமாக வந்து, அவற்றைச் செயல்படச் செய்ய முடியாது; அவை அவை தொடர்பான அதிகாரிகள்தான் அவற்றைத் திறம்பட நிறைவேற்றித் தரவேண்டும்.

துரதிருஷ்ட வசமாக நம் அரசாங்க அதிகாரிகள், கடந்த இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சியின்கீழ் இருந்து பண்பட்டு வந்திருக்கிறார்கள். அந்த முற்றிய பழக்கம் காரணமாக, புதுமைகளை மலர்விக்க—மலர்விக்கச் செய்யும் முயற்சிகளில் முழுமையாக ஒத்துழைக்க முடியாதவர்களாகி விட்டிருக்கிறார்கள். அரசின் ஒவ்வொரு துறையிலும் இந்த நிலைமை நீடித்தாலும், இது உணவுத் துறையில் ஆழமாக வேர்விட்டிருக்கிறது.

கடுமையான கண்காணிப்பு முறைகள் மேற்கொண்டால் ஒழிய அரசின் இந்த உத்திரவு மூலம் விரும்பிய பலனை எதிர்பார்க்க முடியாது.

தமிழக அரசுக்கும் இது ஒரு அறைகூவலை ஏற்கும் விஷயமாக ஆகிவிட்டிருக்கிறது. அரசு, தன் பாரபட்சமற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவொரு சந்தர்ப்பம் இது.

வணிகத்துறையினராயினும், வேறு எவராயினும், நாட்டுமக்கள் அத்துணைப்பேரும் முழுபலத்துடன் ஒத்துழைப்புத் தந்தால்தான் பிரச்னை தீர்ந்ததாகவிருக்கும். இல்லையென்றால், இவ்வுத்திரவு இப்போதைய நிலையைவிட, மோசமான பலனை, எதிர்பாராத நிலைமைகளைத் தோற்றுவித்துவிடக் கூடும்.

நடவடிக்கை என்று ஏற்படுகிறபோது பாரபட்சமற்ற தன்மை கடைப்பிடிக்கப்படுகிறது என்று பொது மக்கள் நம்பத்தொடங்கும் நிலை உருவானால் வெற்றி நிச்சயம் என்று இப்போதே சொல்லிவைக்கலாம்,

# ?! வினா-விடை

**1. கவிதை எழுத வேண்டுமானால் எந்த இலக்கண நூலைப் பயில வேண்டும்?**

தற்போது நடைமுறையிலிருப்பது யாப்பருங்கலக் காரிகையும், யாப்பருங்கல விருத்தியுமே யாகும். காரிகையைப் பயின்றாலே போதும். கவிதை யாப்பின் முறைகள் பெரிதும் புலப்பட்டுவிடும். 'காரிகைக கற்று கவி பாடுவதினும், பேரிகைக் கொட்டி பிழைப்பது நன்றென' ஒருவர் பாடியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. சந்த ஒழுங்கு குன்றாத பாடல்களில், யாப்பமைதி தானாகவே இடம் பெற்றிருக்கும் என்றும் கூறுவர். தமிழிலக்கண வரம்புகளைப் புரிந்துகொள்ள நன்னூல் பெரும் அளவுக்குத் துணைபுரியக் கூடும். கவிதை இயற்றும் எண்ணத்தோடு இலக்கணம் பயில வேண்டுமானால் காரிகை ஒன்று போதும். அனைத்துக்கு மேலாக கற்பனை உள்ளமும், கலைக் கண்ணும் மூலதனமாக இருக்க வேண்டும்.

**2. கவிதைகள் இயற்ற இலக்கியங்கள் துணை புரிய முடியுமா?**

எல்லா இலக்கிய நூல்களாலும் ஏலாது; கவிதை நூல்கள் ஓரளவுக்குத் துணை புரியலாம்.

**3. விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட குரங்கு செத்து விட்டதே, அதனால்...?**

அதனால், விண்வெளிக்குச் செல்லவிருக்கும் வீரர்களும் செத்துவிடுவார்கள் என்று பொருளல்ல.

**4. கம்யூனிசக் கொள்கைகள் இந்தக் காலத்துக்கு ஒத்து வரக் கூடியனவா?**

மார்க்ஸ், ஏங்கெல்ஸ் காலத்தில்கூட ஒத்துவந்திருக்கிறதா என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம். ஒரு தத்துவம் எண்ணிப் பார்க்கப்படும்போது அது அப்போதைய சூழ்நிலைகளையும், தேவைகளையும் முன்வைத்து சிந்திக்கப்படுகிறது. அவை சில சந்தர்ப்பங்களில் காலாகாலத்துக்கும் உதந்ததாயிருக்கக் கூடும்; சில, சந்தர்ப்பங்களுக்கு மட்டுமே நன்மை பயப்பதாயிருக்கக் கூடும். கம்யூனிசத் தத்துவம் அப்படியொன்றும் நீண்ட காலக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், தீர்க்க தரிசனத்தோடு அமைந்திருப்பதாய் நம்பமுடியவில்லை. கம்யூனிசம் என்பது ஒரு தத்துவம்; அதனை அரசியல் அங்காடியில் போட்டு விற்பனை செய்ய வரும்போது சில வேளைகளில் தீய நடைமுறைகளைத் தோற்றுவித்துவிடுகின்றன. இப்போதைய உலகக் கம்யூனிஸ்டுகளின் போக்கை ஆழ்ந்து கவனித்து வாருங்கள். அந்த சிந்தாந்தம் எவ்வளவு அடிப்படைக் கோளாறுகளைக் கொண்டிருக்கிறது என்று தெளிவாகத் தெரியும்.

**5. காமராசருக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார் என்பதற்காகப் பொள்ளாச்சிமகாலிங்கத்தை கட்சியை விட்டு விலக்க நடவடிக்கை மேற்கொண்டதுபோல, எஸ். கே. பாட்டீல் மீதும் நடவடிக்கை எடுப்பார்களா?**

இது, 'காஞ்சி'யைக் கேட்க வேண்டிய வினாவாகத் தெரியவில்லை. எஸ். கே. பாட்டீல், காங்கிரஸ் கட்சியை ரயில்வே பிளாட்பாரம் போன்றது என்றார். அமைச்சரவை சர்வாதிகாரப் போக்கில் இருக்கிறது என்றார். இப்போதைய தலைமை புத்திசாலித்தனமுடையதாக இல்லை என்றார். போதிய அறிவோடு, பிரச்சனைகளைக் கவனிப்பதில்லை என்றார். அக்கறையற்ற மத்திய நிர்வாகம் என்றார். இவையெல்லாம் ஒழுங்குநடவடிக்கைக் குரிய பேச்சுகளா என்ன? மகாலிங்கத்தைப்போல், தான் குற்றம் புரியவில்லை என்று நிரூபிக்கவில்லையே இவர்! இவர் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்?

**6. 'கேரோ' செய்வது என்பது தொழிலாளர்களுக்குரிய உரிமையில்லையா?**

தொழில்களைத் தொடங்கியவர்களுக்கு மட்டும் அதன் நிருவாகத்துக்கென்று சிலபல கொள்கைகளை வகுத்துக்கொள்ள உரிமை இல்லையா?

**7. நீங்கள் கம்யூனிசத்துக்கு எதிரியா?**

உலகத்தில் மூன்றில் ஒருபகுதி கம்யூனிசத் தத்துவத்தின் கீழ் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதிலே மிகவும் அரியதாக சில நல்ல கொள்கைகள் இருக்கின்றன. அவை மட்டுமே எனக்கு உடன்பாடு. மற்றபடி இன்றைய அதன் செயல்முறையும், போக்கும், திட்டங்களும், உடனடியாகக் கண்டிக்கப்பட வேண்டியன என்று கருதுபவன் நான். கம்யூனிசத் தத்துவத்தில் நல்ல கொள்கைகள்' என்பன. இன்று கழகத்திலேயே இருக்கின்றன.

**8. 'அரசியல் வாதி'கள் மாணவர்களை விடவேமாட்டார்களா?**

இந்தியாவிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், இப்போது மாணவர் பிரச்சினைகள் தானே வாழவைத்துக்கொண்டிருக்கின்றன!

**9. அரசியலில் நகைப்புக்குரிய சம்பவங்கள் நடைபெறுவதுண்டா**

மெள்ள கேட்கிறீரே! இன்று நடைபெறுவதெல்லாம் அப்படித்தானே ஐயா இருக்கிறது.

**10. இலக்கியத்துக்கென்று 'காஞ்சி'யில் ஒருபகுதி ஒதுக்கினால் என்ன?**

எப்போதாவது சில வேளைகளில் மட்டுமே அப்படிச் செய்ய முடிகிறது. நிரந்தரமாக்குவது பற்றி யோசிக்கலாம்.

**11. 'காஞ்சி' அண்ணா மலர் எப்போது வெளிவரும்?**

பேரறிஞர் — டாக்டர் — அமரர் அண்ணா அவர்கள் பிறந்தநாளில்!

அரக்கோணம் நகர மன்றத் தலைவர்

**திரு. டி. இராசா அவர்கள்**

படித்து முடிந்ததும், அந்தப் பாவை என் மணக் கண்முன் தோன்றிடவே வீர வணக்கம், வனிதாமணியே! உலகிலே மாண்பும் அறமும் அடியோடு அழிந்து படாமலிருப்பது, உன்போன்ற ஆரணங்குசள் ஒருசிலர் அவ்வப்போது ஆற்றலுடன் பணிபுரிவதனுலே தான். தாய்க்குலத்தின் தனிப்புகழைத் தரணிக்கு விளக்கிய ஒளி விளக்கே! உன் தாள் பணிகிறேன! தையல் என்போர் மையல் ஊட்டும் மைவிழியும், களிப்பூட்டும் கொவ்வைக்

கனிவாயும் தாலாட்
டுமே கொண்டவர்கள்
லார், சுடு சொல் கூறி
திம் அகம அல்லற்
விழந்துவிடும். அனிச்
வையர்; என்று மட்
ஆனல் பிறர் திகைத்

# மூவர் முரசு

டும் திருக்கரமும் மட்
அவர்கள் மெல்லிய
டக்கேட்டாலே அவர்
படும். முகம் பொலி
சப்பூ போல்ருர் அரி
டுமே பேசுவர்.
துப்போயிருக்கும்

நேரத்தில், அம்மையே! நீ காட்டிய அஞ்சா நெஞ்சு, அவனிக்கே ஓர்அணி எனலாம்!! வாழ்க உன் திருப்பெயர் வளர்க மகளிர் மாண்பு'' — என்றெல்லாம் கூறிக்கூறி வியந்து பாராட்டினேன. ஆமாம் தம்பி. அனைவருமே போற்றிடத்தக்க வீரச் செயலை புரிந்தார் அந்த மாந்தர்குல மாணிக்கம்.

எழு நூறு போலீஸ் வீரர்கள் தடியும் துப்பாக்கியும் தயாராக வைத்துக்கொண்டுள்ளனர்—ஆனல் செய்வது யாது என்று அறியாமல திண்டாடித் தவிக்கின்றனர்; கட்டிடத்துக்கு வெளியே இருந்தபடி. உள்ளே இருந்தோ ''ஐயயோ! அம்மம்மா! ஆபத்து! ஆபத்து! ஆண்டவனே! காப்பாற்று ஓடிவாருங்கள் ஓடி!'' என்ற கூக்குரல் பீறிட்டுக்கொண்டு வருகிறது. துப்பாக்கி வேட்டு களப்பி உள்ளே நுழையலாம, ஆனல் துப்பாக்கியால் சுட்டால், கொடுமைக்காரர் மீது குண்டு பாய்ந்திடாமல் ஆபத்தில் சிக்கிக்கொண்டப்போர் மீது வீழ்ந்தால் என்ன ஆவது என்ற அச்சம், போலீசாரை,ச் செயலற்றவர்களாக்கிவிட்டது.

பள்ளிக்கூடக் கட்டிடம், தம்பி, உள்ளே தாளிடப்பட்டுக் கிடக்கிறது— ஆறு வயதிலிருந்து பத்து வயது வரையில உள்ள சிறுர்கள் சிறுமியர்கள்—அந்தச் சிட்டுகள் உள்ளே சிககிக்கொண்டன. சித்திரவதை செய்யப்போவருேம வெட்டிக் கண்ட துண்டமாக்கி வீசி எறியப்போகிருேம என்று வெறியர் இருவர் கொககரிக்கின்றனர். எப்படியோ, பள்ளிக்கூடத்துச்கு உள்ளே நுழைநதுவிட்ட இரண்டு வெறியர்கள் பள்ளி மாணவர்களின் கைகாலைக கட்டிப்போட்டுவிட்டனர், ஆசிரியாகளேயும சிறைப்படுத்திவிட்டனர்—வெறியர் கரத்தில கத்தியும இருக்கிறது, துப்பாக்கயும் இருக்கிறது. எவ்வளவு பதைபதைத்திருக்க வேண்டும அந்தப் பாலகர்கள்!!

ஆறு மணி நேரம், 92 குழந்தைகள், மூன்று ஆசிரியர்கள் இப்படிச் சிக்கிக்கொண்டனர்—இரண்டு வெறயர்கள் உள்ளே இருநதுகொண்டு கொக்கரிக்கிருர்கள்—மரியாதையாக நாங்கள் கேட்பதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உங்கள் குலக்கொழுந்துகளை மீட்டுககொண்டு செலலுங்கள்! தாககட நுழைவீரேல், நாங்கள் பிடிபடுமுன்பு, குழநதைகளை வெட்டிக் குவிப்போம!!—என்கிருர்கள்.

அநதக் கொடியவர்கள் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டது என்ன தெரியுமா, தம்பி, கேள் 18,24,000 ருபாய் வேண்டும என்கிருர்கள!!



# இன்னமும் உண்டு இத்தகைப் பெண்கள்!

உள்ளே, துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினர்—அவர்களை உயிரோடு திரும்பப் பெறவேண்டுமானால், பதினெட்டு இலட்ச ரூபாய் தரவேண்டும் என்கிறார்கள்—கூறுபவர்கள் கரத்தில் கத்தி, துப்பாக்கி, வெளியே பல நூறு போலீஸ். வந்தது வரட்டும் என்று உள்ளே நுழையலாம், ஆனால், பாதகர்கள், மிரட்டுகிறபடியே, குழந்தைகளைக் கொன்றுவிட்டால்...?

அவ்வளவு வெறிபிடித்தவர்களா என்ற சந்தேகத்துக்கு இடமேயில்லை—ஏனெனில், குழந்தைகளைக் கட்டிப்போட்டுவிட்டு, கொண்டுவா, பணத்தை!—என்று கொக்கரிக்கும் இருவரும் பைத்யக்காரர்கள்! மிக பயங்கரமான போக்குடைய பித்தர்கள்! பித்தர்கள் விடுதியிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டார்கள்!

இப்போது, ஒருமுறை அந்தக் காட்சியை மனக் கண்ணாலே பார் தம்பி! உள்ளபடி, திடுகிடச் செய்கிறதல்லவா?

அப்படிப்பட்ட சமயத்திலேதான், அந்த ஆரணங்குக்கு எங்கிருந்தோ ஓர் வீர உணர்ச்சி பொங்கி எழுந்தது! குலக்கொடிகள், உயிரோவியங்கள், கட்டப்பட்டு, கண்ணீர் வடிக்கின்றன! கொஞ்சி விளையாடும் சிறார்கள் சிறுமிகள்! கன்னக் குழியைக் காட்டி மகிழ்விக்கும் ஓர் சிட்டு, கண்ணில் குறும்பு காட்டி களிப்புறச் செய்யும் ஓர் மான், இசைபாடி இன்பமூட்டும் ஓர் குயில், களிநடம் காட்டி கவலையைப் போக்கிடும் ஓர் கலாபம், மழலையால் மனதுக்கு மதுரம் தரும் பருவத்தினர், தாய் உச்சிமோந்து முத்தமிட்டு பள்ளிக்கு அப்பிவைக்கும் பருவத்தினர்—பாதகர் இருவர், பயங்கரம் பேசுகின்றனர், அவர் தம் கரத்தில் கத்தியும் இருக்கிறது; புத்தியிலோ கோளாறு! எதையும் செய்வர்! எதற்கும் அஞ்சார்! பாதகம் இது, தீது ஆகாது என்ற பாகுபாடு அறியா மனம்! எந்த நேரத்திலும், சுட்டுத் தள்ளிவிடக் கூடும் வெட்டிச் சாய்த்துவிடக் கூடும்!!

குழந்தைதளைப் பார்க்கப்பார்க்க, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்புகிறது! பயன்? எதையாவது செய்து ஆபத்தைப் போக்கியாகவேண்டும். அதுவும் விரைவில்.

பூவை புலியானாள்! வெறியன் மீது பாய்ந்தாள்—அஞ்சாமையன்றி வேறோர் ஆயுதம் இல்லை! ஆனால் அஞ்சாமையைவிட ஆற்றலளிக்கவல்ல ஆயுதம் வேறென்ன உண்டு! பாய்ந்தாள்—பித்தன் கரத்திலிருந்த கத்தியைப் பறித்துக்கொண்டாள், அந்தக் கத்தியைக்கொண்டே அவன் மண்டை மீது தாக்கவே மதி குழம்பிக்கிடந்த அந்த வெறியனின் மண்டை பிளந்தது, கீழே சாய்ந்தான்! வெற்றி—முதல் கட்டம்! கட்டிடக் கதவினைத் திறந்திட முடிந்தது. காரிகையைக் கொன்றுபோடக் கிளம்பினான் மற்றோர் பித்தன்! அவனைச் சுட்டுச் சாய்த்தது, உள்ளே நுழைந்து போலீஸ். குழந்தைகள் பிழைத்துக் கொண்டன! ஊரார் குதூகலமடைந்தனர்! இரு பித்தர்களில் ஒருவன் மருத்துவ மனையில் இறந்தொழிந்தான்—மற்றவன் கூண்டில் தள்ளப்பட்டுக்கிடக்கிறான்.

தெய்வமே! தெய்வமே! எங்கள் குடும்பத்துக்கு நீயே கண்கண்ட கடவுள்!—என்று பலரும் கண் கசியும் நிலையில் நின்று அன்பைக் காணிக்கையாக்கி அந்த ஆரணங்கின் காலடியில் கொட்டி இருப்பர். நமக்கே தோன்றுகிறதே, அந்த நல்ல பெண்மணியின் நாமத்தை வாழ்த்த வேண்டும் என்று. தம்பி! கார்ட்டோரி என்பது அந்தக் காரிகையின் பெயர், பித்தர் இருவரில், ஒருவன் பெயர் ஆர்ட்டுரோ. மற்றவன் பெயர் ஆஸ்வால்டோ! பெயர் அந்த நாட்டுக்குத் தக்கபடி, மொழியின் தன்மைக்கேற்ப அமைந்திருக்கட்டும்—அந்த அணங்கு காட்டிய தீரத்துக்குத் தக்கவிதத்தில், பெயர் சூட்டி நாம் மகிழலாம் தம்பி, மறக்குடி மகள்!!

மகளிர் குலத்தின் மாண்பினை விளக்கிடும் நோக்குடன் யாரோ ஆசிரியர் ஆர்வத்துடன் கட்டினார் போலும்—வீரக்காதை தீட்டும் புலமை இதிலே விளக்கமாகத் தெரிகிறது என்று எண்ணிக்கொண்டுவிடாதே தம்பி, இது கதை அல்ல; உண்மை நிகழ்ச்சி—சென்ற திங்களில், இத்தாலி நாட்டில் டெராஜானோ, எனும் ஊரில் நடைபெற்றது.

இந்த வீரக்காதையை நான் படித்ததும், வியப்புற்றேன்—பலப்பல கருத்துக்கள் அலை முறையில் தோன்றிடலாயின!

கொடுமை இந்த அளவுக்கெல்லாம் செல்லுகிறதே என்று ஓர் எண்ணம் குடைந்தது—உலகு இன்றளவும் நாகரீகத்தைக் கடைப்பிடிக்கக்காணோமே என்ற கவலை மனதினை அரித்தது.

அந்த வனிதையின் வீரமே வீரம் என்ற எண்ணம் வந்தது—ஆம்! ஆம்! உலகு கெட்டுக்கிடப்பினும் நம்பிக்கைக்கு இன்னமும் இடமிருக்கிறது. இத்தகைய நாரீமணிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்—என்ற மகிழ்ச்சி மலர்ந்தது.

அந்த இரண்டு பித்தர்களை எண்ணிக்கொண்டேன்—கள்ளங் கபடமற்ற அந்தக் குழந்தைகளிடம் தமது கொடுவாளைக் காட்டி நின்றனரே!—என்பதை நினைத்தபோது நடுக்கமே எடுத்தது. இவர்களிடம் மனிதத்தன்மை மாண்டொழிந்தது ஏனோ என்று எண்ணினேன்—பித்தர்களன்றோ! அவர்கட்கு, தாம் எது செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்று என்ன தெரியும்—குழம்பிய மனம்—என்பதை எண்ணினேன், ஓரளவு சாந்திபெற்றேன். அதிலிருந்து, தம்பி, என் மனம் நமது நாட்டு அரசியலுக்குத் தாவிற்று—என் மனக்கண்முன், மூன்று தலைவர்கள் போக்கோலம் பூண்டு மும்முரமாகப் பரணிபாடி பவனி வரும் காட்சி தெரியலாயிற்று.

கெடுமதியுடையோய்! எதையோ சொல்லி வருகிறாய் என்றெண்ணிப் படித்துக்கொண்டே வந்தால், இடையிலே நீ எமது தலைவர்களை இழித்துப் பேசும் கட்டத்தைப் புகுத்துகிறாயே, பித்தர்களின் பேய்ச் செயலைப்பற்றிக்குறிப்பிட்டு விட்டு, எமது 'மூவர்' பற்றிப் பேசவருகிறாயே, அங்ஙனமாயின், எமது 'மூவர்' பித்தர் என்று கூறவா துணிகிறாய், விடமாட்டோம் உன்னை... என்று கோபத்துடன் கூறிடக்கிளம்பும் காங்கிரஸ் நண்பர்கட்கு, என் விளக்கத்தைத் துவக்கத்திலேயே கூறிவிடுகிறேன்—நான் காட்டிய நிகழ்ச்சியில், விவரமறியாச் சிறுவர்கள் கட்டிப்போடப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொடியவர் இருவரின் பயங்கர ஆயுதங்களுக்கு இரையாகும் ஆபத்துக்கு உட்படுத்தப்பட்டார்களே, அதுவரையில்தான், நம் நாட்டு அரசியல்

# 'மூவர்' பொருத்தமும் முத்துப்போலே!

நிலைமையுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்கிறது என்று கூறிவிடுகிறேன். இத்தாலி நாட்டிலே இரு பித்தர்கள் செய்த வெறிச் செயல் போன்றதோர் நடவடிக்கை தமிழக அரசியலிலும் இதுபோது நடைபெற்றுக்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறதே தவிர, பித்தர்களாகத் தெரிகிறார்கள் என்று கூறவில்லை. எனவே நமது தலைவர்களைப் பித்தர் என்று தூற்றுகிறேனோ என்றெண்ணிக் கோபம் கொள்ளற்க! என்று நான் கூறுவதாகத் தம்பி! காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லிவிடு. நமக்கேன் நல்லவர்களின் பொல்லாப்பு!

இத்தாலி நாட்டு இருபித்தர்கள் பள்ளிச்சிறார்களைக் கட்டிப்போட்டு கத்தி காட்டி, கொன்று போடுவதாக மிரட்டி, பணத்தைக்கொள்ளை அடிக்க முயற்சித்தது போல, இந்நாட்டு மக்களைத் தெளிவுபெறாத நிலையில் தள்ளிவைத்துவிட்டு, அடக்குமுறை, பணபலம் எனும் இரு பயங்கரக் கருவிகளைக் காட்டி, அழித்தொழித்து விடுவதாக மிரட்டி, காங்கிரஸ் கட்சியினர் ஓட்டுகளைக் கொள்ளையிடத் திட்டமிட்டு வேலைசெய்து வருகின்றனர். மற்றவர்கள் திகைத்துப்போய், செயலற்றவர்களாகிக் கிடந்தபோது ஓர் ஆரணங்கு, அஞ்சாது போராடி, கொடியவர்களின் கொலைபாதகச் செயலைத் தடுத்து வெற்றி கண்டதுபோல, நாம், இந்தத் தேர்தலிலே, காங்கிரசை எதிர்த்து நிற்கிறோம். அந்த ஆரணங்குக்கு இருந்த அஞ்சா நெஞ்சம், நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவை—எங்ஙனம், கயவர்களிடம் கத்தி இருக்கிறதே, காட்டுக் கூச்சலிடுகிறார்களே, துப்பாக்கி இருக்கிறதே துடுக்குத்தனமாகத் தாக்குகிறார்களே, என்பதுபற்றித் திகில் கொள்ளாமல் அந்த மங்கையர் திலகம், கொடியவனின் கொடுவாளைப் பறித்து எறிந்தாளோ, அதுபோல் செயலாற்ற, நமக்குத் துணிவு வேண்டும். ஏனெனில் துரைத்தனத்தில் அமர்ந்துள்ளவர்களிடம், படைக்கலன்கள் மிகுதியாக உள்ளன என்பதுமட்டுமல்ல, அவர்களில் மிகப் பலருக்கு, வெறி அளவுக்கு நம்மீது கோபம் பிறந்துவிட்டிருக்கிறது. அதிலும் நம்மை எல்லாம் ஆளாக்கிவிட்ட பெரியாரையே அன்புக் கயிற்றினால் கட்டிப் போட்டுவிட முடிந்தது; இந்தப் 'பொடியன்கள்' அல்லவா போரிடக் கிளம்புகிறார்கள் என்று எண்ணும்போதே அவர்களுக்குக் கோபம் கோபமாக வருகிறது. அது நமக்கு நன்றாகப் புரிகிறது! கடந்த பத்து நாட்களாக, பவனி வரும் 'மூவர்' செல்லுமிடமெல்லாம் சீறிச்சீறிப் பேசுகிறார்கள் — இதுகளை ஒழித்துக்கட்டுவோம் என்று உறுமுகிறார்கள்! தேர்தலுக்காகச் செலவிடத் தம்மிடம் குவிந்துகிடக்கும் பணத்தையும், மேலும் இலட்சக் கணக்கில் கொட்டித்தர, கொள்ளை இலாபக்காரரும் கள்ள மார்க்கட் அதிபரும் காத்துக் கிடக்கும் காட்சியையும், தமது வீரதீரம், அறிவு ஆற்றல், பக்தி யுக்தி பற்றி எல்லாம் புகழ்பாடிட, பத்திரிகைகள் பல பராக்குக்கூறிக் கிடப்பதையும் காணும்போது அவர்களுக்கு ஏன் அந்த அளவுக்கு ஆணவம் பிறக்காது. அம்மி குழவியையே அப்பளமாக்கிவிட்டோம், இந்த இஞ்சிப் பச்சடிகள் எம்மாத்திரம் என்று எக்காளமிட்டு வருகிறார்கள்.

கொப்பம்பட்டியிலே தமது 'குரலை' உயர்த்திய காமராஜர் ஒரு பத்து நாள் படபடவெனப் பேசிவிட்டு, அதன் பலனாக ஆயாசம் தவிர பிறிதொன்று காணாததால், சிறிதளவு அமைதி பெற்றார். வாய்மூடிக்கிடந்திடலானார். இப்போது, 'மூவர்' கிளம்பியுள்ளனர் முரசு அறைந்திட!

ஆஹா! தம்பி! இந்த 'மூவர்'களின் பொருத்தம் இருக்கிறதே, சொல்லி முடியாது.

பெரியார், நாட்டுக்கு ஒவ்வோர் நாளும் எடுத்துச் சொல்லிவருவது தெரியுமல்லவா? காமராஜர் நல்லவர், நம்மவர், ஆனால் இந்தச் சுப்பிரமணியம் இருக்கிறாரே, ஆபத்தான 'பேர்வழி'—ஆச்சாரியாரின் கையாள்—சமயம் பார்த்துக் குழி பறிப்பவர்—சந்தர்ப்பம் பார்த்துத் தட்சிணப் பிரதேசத் திட்டத்தைப் புகுத்திவிடக் காத்துக்கிடப்பவர்—என்பது பெரியாரின் ஆய்வுரை. அவர் கூறுவதற்கேற்பவே, காமராஜர் தட்சிணப் பிரதேசம் கேட்பவர்களைத் தாக்கிப் பேசினார். சுப்பிரமணியனார், தட்சிணப் பிரதேசத்தின் அவசியத்தைச் சிலர் உணராமலிருக்கிறார்களே, என்ன அறிவீனம் என்று கேலி பேசுகிறார்.

ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்துக்கு, கனம். சுப்பிரமணியம் தாலாட்டுப் பாடினார், பிறகு அதை அவரே சவக்குழியில் புதைத்துவிட்டு, ஒப்பாரி வைத்தாலும், பதவி பறிபோய் விடுமோ என்ற அச்சத்தால், ஒரு சொட்டுக் கண்ணீரும் விடாமலிருந்துவிட்டார்.

ஆச்சாரியார் காலத்திலே இந்த ஆற்றல்மிக்க அமைச்சர், கொதித்ததையும், குதித்ததையும், நாடு கண்டது. குலக் கல்வித் திட்டத்தை இந்தக் கொள்கை வீரர், விட்டுக்கொடுக்கவே மாட்டார், பதவிப் பிசின் அவரை ஒன்றும் செய்யாது. தன்மானம் பெரிது, கேவலம் பதவி அல்ல என்று கருதும் தமிழர் இவர், இவரிடம் கொங்குநாட்டு உறுதிப்பாடு உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது, என்று பலரும் கருதும்படி பேசினார்—மறுப்புக் கூறினோரை ஏசினார்! கல்வித் துறையில் இந்தத் திட்டத்தைப் புகுத்தா விட்டால், இந்த 'ஜென்மம்' கடைத்தேறாது என்று 'கர்ஜனை' செய்தார்.

நாடு சீறிற்று—காமராஜர் கண்சிமிட்டினார்—காங்கிரஸ் கமிட்டிகளே களமாயின! ஆச்சாரியார் கவிழ்ந்தார்—காமராஜர் துறவறத்தைத் துறந்து, தமது ஓய்வைத் தியாகம் செய்துவிட்டு, பதவியில் வந்து அமர்ந்தார்; பக்கத்திலேயே பல்லை இளித்துக்கொண்டு நின்றார் இந்தப் பண்பாளர்! நான், நாட்டுக்குத் தந்த நல்ல திட்டத்தை, ஆயிரம் எதிர்ப்புகளையும் கண்டு நான் அஞ்சாமல் திணித்த இந்தத் திட்டத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்ட இந்த அமைச்சர் அவையில் நான் இடம் பெற்றால், எவர்தான் என்னை மதிப்பர், காலம் முழுவதும் கைகொட்டிச் சிரிப்பரே, பதவி மோகம் விட்டதா பார் என்று கேலி பேசுவரே நான் எப்படி இந்த அமைச்சர் அவையில் இருக்கலாம்—வேண்டேன்! என்று கூறிவிட்டு, கோவை சென்று, வக்கீல் வேலையை விட்ட இடத்திலிருந்து துவக்குவார், குருநாதர் இராமாயணம் பற்றி எழுத இவர் பாரதம் பற்றி எழுதுவார், என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அமைச்சர் பதவி என்ன சாமான்யமானதா! அந்த வெல்வட்டு மெத்தையின் சுகம் வேறு எங்கு கிடைக்கும்! ஆனந்தமாக அங்கு அமர்ந்து கொண்டு, அலட்சியமாக மற்றவர்களைப் பார்த்துக்

# நாவிலிருந்து நாற்றமடிக்குது!

கொண்டு, ஆணவமாக எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் வாய்ப்பை இழக்க மனம் வருமா! பில்லை போட்ட சேவகர்கள் எத்தனை பேர்! பிரியத்தைக் கொட்டிடத்துடிப்போர் எத்தனை! சீமான்கள், கட்டியங் கூறி நிற்கிறார்கள், காலையையும் தன்னையும் ஒரே விதமாகப் பார்த்து வந்த பட்டக்காரர்களெல்லாம் 'கனம்' ஆன பிறகு, கைலாகு கொடுக்கிறார்கள், கொடுத்துவிட்டு, கை வலிக்கிறதோ!—என்று கனிவுடன் கேட்கிறார்கள்! இந்தச் சுகானுபவத்தை இழக்க மனம் வருமா! தோட்டக் கச்சேரிகள், அதிலே வந்து கலந்து கொள்ளும் துதிபாடகர்கள்! மாநாடுகள், அதிலே, மதிப்பளிக்க வரும் மகானுபாவர்கள்! கலைக் காட்சியைத் திறந்திட, கான மழையில் நனைந்திட 'கனம்' ஆக இருந்தால், தனிக் கவர்ச்சி காணலாமே! இசைவாணரிடமே இசை இலக்கணம் பற்றிப் பேசி, ஆசான் கோலமே காட்டலாம்! தமிழ்ப்பேராசிரியரிடமே, தமிழ் மொழியில் என்ன இருக்கிறது என்று கேட்டுவிட்டு, அவர் முகம் சுளிக்கிறதா என்று கூடக் கவனிக்கலாம்! நடனக் கச்சேரிகளில் தலைமை தாங்கி, "மனிதனைத் தேவனுக்கும் மதுரமான கலை! அம்பலத்தானின் அடி பணியும் பக்தியை ஊட்டும் லளிதக் கலை! கண்டேன்! களிப்புக் கடலில் மூழ்கினேன்! அந்தக் கட்டிளங்குமரியின் கடைவெட்டினையும் இடை நெளிவையும் கண்ட போது, நான் கைலை சென்றது போன்றே களிப்புப் பெற்றேன்" என்று பேசலாம்! தம்பி! இவ்வளவு இன்பம் கூட்டித்தரும் பதவியை இழக்க அவர் என்ன இளித்த வாயரா?

கல்வித்திட்டம் வேண்டாம் என்கிறீர்கள், அவ்வளவுதானே! உங்களுக்குக் கல்வித்திட்டம் பிடிக்கவில்லை, நான் அல்லவே! சரி! கல்வித்திட்டம் வேண்டாம்! அதைக் குழிதோண்டிப் புதைக்கத்தான்வேண்டும். உமக்கு ஏன் அந்தச்சிரமம், நானே செய்கிறேன்—எனக்குத்தான் அந்தக் குழி எத்தனை ஆழமாக இருக்கவேண்டும் என்பது தெரியும்—என்று கூறினார் போலும், பதவியில் ஒட்டிக்கொண்டார்!

அப்படிப்பட்ட தனமானம் ததும்பும் மனம், தம்பி, இந்த அருமை அமைச்சருக்கு!

அவருடன், காமராஜர்! ஊரிலே, பெரியார் பேசுவதோ, நான், கனம். சுப்பிரமணியம் ஆச்சாரியாரின் கை ஆளாக இருந்துகொண்டு, என் காமராஜரைக் கவிழ்த்து விடாதபடி பாதுகாப்பு அளித்து வருகிறேன், என்பதாகும்.

காமராஜர், பெரியார்மீது அன்பும் பொழிவதில்லை, வம்புக்கும் நிற்பதில்லை.

கனம். சுப்பிரமணியனாரோ, தனக்குப் பெரியார் மீது மட்டுமல்ல திராவிட இயக்கத்தின்மீதே உள்ள, 'துவேஷத்தைக்' கூட்டம் தவறாமல் கக்குகிறார், கூட இருப்பவர்கள், மெத்த நாற்றமடிக்கிறது என்று கூறித் தடுக்கும் வரையில் கக்கித் தீர்க்கிறார்.

அவர் இருக்கிறாரே. பக்தவத்சலனார்—சொல்லத் தேவை இல்லை! மக்கள் பார்த்து. சட்டசபைக்கும் செல்லவிடமாட்டோம் என்று கூறி, தேர்தலில் தோற்கடித்தார்கள், எம். எல். ஏ. ஆகத்தானே கூடாது என்றீர்கள், இதோ பாருங்கள் மந்திரியே ஆகிவிடுகிறேன் என்று ஜனநாயகம் செய்து காட்டிய பெருந்தகையாளர்!

இந்த மூவரும் முரசுகொட்ட, ஊர்பல சென்றனர். உள்ளத்துக்கு உற்சாகம் பொங்குமளவுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசினர்—நான்தான் இருக்கிறேனே, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே, அதுபோல; என்னை எடுத்து அலசி, ஆராய்ந்து, உரைத்து, நிறுத்து, தூக்கி எறிந்து விட்டார்கள், கீழே!

வடக்கு—தெற்கு என்று பேசுவது அபத்தம்—ஆபத்து—தீது—அப்படி ஒரு பிரச்சினை கிடையாது.

அப்படியே ஒன்று இருந்தாலும், அதைக் கண்டு அச்சம் கொள்வது கோழைத்தனம்.

இந்த தி. மு. க. கோழைகள்; வெள்ளைக்காரனுக்குக் குலாம்கள்!

இவர்களை ஒழித்துவிடுவோம், அழித்துவிடுவோம்.

மூவர் முரசும் இதைத்தான் ஒலித்தன! இதை ஒலிக்க மட்டுமே இவர்கள் பயின்றுள்ளனர்.

ஆனால் மக்கள் வேறுபல இசைகளைக் கேட்டுப் பழக்கப்பட்டுப் போய்விட்டனர்.

"அண்ணாத்துரை கிடக்கிறானய்யா, அமைச்சர் பெருமக்களே! உங்கள் சங்கதி என்ன? நாடு ஆளும் வாய்ப்பு அளித்தோம் நாங்கள் கண்டது என்ன? வரிச் சுமையைத் தாங்கித் தத்தளிக்கிறோம். வாட்டம் ஓட்டிட நீவிர் வகுத்தளித்தது என்ன? தி. மு. க. இதைச் சொல்கிறது கேளாதீர். அதைக் கூறுகிறது நம்பாதீர் என்று எங்களுக்குப் போதனை புகட்டியது கிடக்கட்டும்—நாங்கள்,

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்
பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு

எனும் குறள் வழி நடக்கத் தெரிந்தவர்கள்—எனவே எந்தக் கழகமும் இல்லாதது கூறி எம்மை ஏய்த்திட முடியாது! உண்மையை நாங்கள் தெரிந்துகொண்டோம்.

உமது ஆட்சி எமக்குத் திருப்தி தரவில்லை.

ஊழல், நாற்றமடிக்கிறது.

உழைப்பாளிக்கு உரிமை மறுக்கப்படுகிறது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வக்கும் உமக்கு இல்லை.

அடக்குமுறையை அவிழ்த்து விடுகிறீர்கள்.

வரிமேல் வரி போட்டு வாட்டி வதைக்கிறீர்கள்.

வடநாட்டிலே அதிகாரத்தைக் குவித்திருக்கிறார்கள்.

எதற்கும் காவடி தூக்கிக்கொண்டு டில்லி போகிறீர்கள்.

வளமும் செல்வமும் வடநாட்டில் பெருகிக் கிடக்கிறது.

தென்னகம், தொழில் வளர்ச்சியற்றுத் தேய்கிறது

புதிய புதிய தொழிற் திட்டம் தீட்டும் உரிமை சென்னையிடம் இல்லை டில்லியின் கரத்தில் இருக்கிறது.

# நன்றி கொன்றனர் நாடாள வந்தோர்!

அணையும் தேக்கமும் அங்கு, பிரம்மாண்டமான அளவு.

இங்கு பாசனத்துக்காகச் சிறு அணைகள்—அதற்கும் மக்களிடம் அதிகாரப் 'பிச்சை' எடுத்தீர்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்துக்குச் செய்யப்பட்ட அநீதியை, 'தேசீய' ஏடுகளே காட்டின—கட்டுரை, கவிதை, படம், போட்டு; நீங்களேகூடச் சில நேரங்களில் கண்ணைக் கசக்கிக்கொண்டும் கையைப் பிசைந்துகொண்டும், சொல்லியிருக்கிறீர்கள்!

தமிழகத்தின் உரிமையைக்கூடக் காப்பாற்றும் ஆற்றல் உமக்கு இல்லை; தேவிகுளம் பீர்மேடு இழந்தீர்கள்.

உம்முடைய வார்த்தைக்கு டில்லி மதிப்பளிக்கவில்லை; மானம் பெரிது என்று கருதி பதவியைத் துறக்கப் போவதாக 'பாவனை'க்குச் சொல்வதற்கும் பயந்தீர்கள்!

ஒரு முதியவர், சாவது தெரிந்தும், ஈவு இரக்கமற்று இருந்தீர்கள்.

தமிழ்நாடு என்று பெயரிடும் அளவுக்கும் உமக்குத் தன்மான உணர்ச்சி இல்லை!

ஆகவே அமைச்சர்களே! அண்ணாத்துரை கிடக்கிறான், அற்பன். அவனுக்கு அரசியல் என்ன தெரியும், சினிமா வசனம் எழுதுபவன், பிளேட்டோவுக்குப் பெயர் கிடைத்ததே. நீவிர் அவர் காலத்தில் இல்லாததால், அரிஸ்டாடிலுக்கு அறிவாளி என்ற பெயரே, உம்மை மறந்ததால் தந்தனர்—அது தெரியும் எமக்கு—எனவே, அவனைத் தள்ளிவிட்டு, தயவுசெய்து இதோ நாங்கள் கேட்கிறோமே, எங்கள் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை, இவைகளுக்கு, ஒளிவு மறைவு இன்றி, உள்ளத் தூய்மையுடன் பதிலளியுங்களேன் என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

மக்களைக் காணும்போதே, இந்தச் சூழ்நிலை புரிந்து விடுகிறது. மூவருக்கும் சுரீல் என்று கோபம் கிளம்புகிறது. கோபத்தைக் காட்ட வேறு வழி? நம்மீது காய்ந்து விழுகிறார்கள்.

மூவர் முரசு, சென்ற கிழமை மிக மும்முரமாக வேலை செய்தது—இம்முறையில்.

இதிலே, காமராஜர், இப்போது ஒரு புதிய கட்டத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறார். நான் இதனை எதிர்பார்த்தேன், ஆனால் இவ்வளவு விரைவில் நடைபெறும் என்று நினைக்கவில்லை.

இதுநாள் வரையில், அவர், தமது கோபப் பார்வையையும், அலட்சியமான கண்டனத்தையும், நம்மீது மட்டும்தான் செலுத்தி வந்தார். இப்போது, காலம் கனிந்துவிட்டது என்று எண்ணுகிறாரோ, என்னவோ, மெதுவாக பெரியார்மீதும், திராவிட கழகத்தின் மீதும் கூடத் தமது தீ நாவைச் செலுத்தத் தொடங்கிவிட்டார்.

காமராஜருக்கு, நமது கழகத்தின்மீது கசப்பும் கொதிப்பும் இருக்கக் காரணம் இருக்கிறது — சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்! என்று நரியே சொல்லிற்றாமே, (கதையில்) இந்த நாடாளும் நாயகர் சொல்லாமலா இருப்பார்! நாம், தனியாக எம்மிடம் ஒரு கட்சி இருக்கும், திட்டம் இருக்கும், கொடி இருக்கும், ஆனால் உமக்குத்தான் அவ்வளவும் பயன்படும்—என்று கூறி 'குத்தகைக்கு' விடவில்லை, நமது கழகத்தை!!

கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த இந்தக் கழகம், விசுவாமித்திரனிடம் ராஜ்யத்தைத் தானமாக்கி விட்டு, சுடலை காக்கச் சென்றானுமே அரிச்சந்திரன், அவ்விதம், காமராஜருக்குக் காணிக்கை யாக்கிவிட்டு அவருடைய திருவைப் பாராட்டும் பஜனை வேலையை மேற்கொள்ளும் துணிவு பெறவில்லை.

முடிகிறதோ இல்லையோ, மூலைக்குச் செல்கிறோமோ, காலத்தின் துணை பெற்று வெல்லுகிறோமோ, அது வேறு பிரச்சினை—அது குறித்துக் கவலையற்று, தேர்தலில் போட்டியிடவே முடிவு செய்திருக்கிறோம். எனவே, காமராஜருக்கு சென்றேன், கண்டேன், வென்றேன், என்று கூறுவதற்கான வாய்ப்பும் பாழாகிவிட்டதே என்பதனால், கோபம் கொப்பளிக்கக் காரணம் இருக்கிறது—சுடு மொழி பேசுகிறார். பேசட்டும். பெரியார்மீது, இழி மொழி வீசக் காரணம் இருக்கிறதா! செய்நன்றி மறப்பவர் பற்றி வள்ளுவர் கூறியதைக் காமராஜருக்குக் கவனப்படுத்தும் ராஜவேலர்கள்கூடக் கிடைத்திருக்கிறார்களே! நான் எந்த நன்றியையும் கொல்வேன் என்று துணிந்து கூறுபவர் போலல்லவா, காமராஜர் பெரியார்மீதே கேலி வீசுகிறார்.

திராவிடர் கழகத்தின் வளர்ச்சியே பாழாவதானாலும் கவலையில்லை. நான் காமராஜரை ஆதரித்தே தீருவேன் என்று பெரியார் பேரார்வம் காட்டி, வருகிறார், அவருக்குக் காமராஜர் காட்டும் மரியாதை, நன்றி, என்னவிதமாக இருக்கிறது?

ஆச்சாரியார்மீது காமராஜருக்குக் கோபம் வந்தது. ஆச்சாரியார் காங்கிரசில் சர்வாதிகாரப் போக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது, சீரழிவு ஏற்பட்டு விட்டது என்று பேசுவது மறைமுகமாகத் தன்னைக் கண்டிப்பது என்று காமராஜர் கருதுகிறார், அதற்காக ஆச்சாரியாரைக், கண்டிக்கக் கிளம்புகிறார்.

நாம் கண்டிக்க நேரிடும்போது, என்ன சொல்கிறோம்.

குல்லூகபட்டர்

சாணக்கியர்

வர்ணாஸ்ரமி

சனாதன வெறியர்

என்று பல கூறுவோம். தம்பி! நினைவில் வைத்துக் கொள்.

ஒரு குழந்தையைக் கொஞ்சுகிறோம்—செல்லப் பெயரிட்டு அழைத்துக் கொஞ்சுகிறோம். என்னென்ன சொல்கிறோம்,

வாடா என் குரங்கே!

கிட்டே வாடா கோட்டானே!

என்று சொல்வோமா!

தங்கக் கட்டியே

வைர மணியே

வண்ண நிலாவே

பேசும் ரோஜாவே

என்று ஏதேதோ பேசுகிறோம். அதுபோலவே, கண்டிக்

# தரங்கெட்ட உவமை தந்த பின்புமா?

கும்போது, பயன்படுத்தப்படும் சொற்களையும், நினைவிலே கொண்டுவா.

தம்பி! இனிக்கேள் இந்த வேதனை தரும் விஷயத்தை.

ஆச்சாரியாரைக் கண்டிக்கக் காமராஜர் கிளம்பினார்; என்ன கூறிக் கண்டித்தார், தெரியுமா?

> என்ன இந்த ராஜகோபாலாச்சாரியார் இப்படிக்கெட்டு விட்டாரே! வர. வர. இராசாமிப் பெரியார் தரத்துக்கு கீழே இறங்கிவிட்டாரே!

என்று கண்டிக்கிறார். எல்லா இதழ்களிலும், வெளியிட்டனர்; ஒன்றுக்கேனும் பெரியார் மறுப்பு அளிக்கவில்லை.

பெரியார் பற்றிக் காமராஜரின் எண்ணம் எப்படி இருக்கிறது என்பது தெரிகிறதல்லவா!

எவ்வளவு ஏளனம் தொனிக்கிறது, அந்த ஏசலில் என்பதைப் பார்த்துவிட்டு, பெரியார் எத்துணை மும்முரமாக இந்தக் காமராஜருக்கு ஆதரவு திரட்டுகிறார் என்பதையும் பார்க்கும்போது, எனக்கு வேதனையாக இருக்கிறது. முன்னேற்றக் கழகத்தின் மீது இருக்கும் கோபம் காரணமாகக் கருத்துக் குழம்பியுள்ள தோழர்களுக்குத் தவிர, மற்ற தி. க. வைச் சாரார், உள்ளபடி வேதனையும் வெட்கமும் அடையத்தான் செய்கிறது.

பெரியார் என்பதற்குக் காமராஜர் கொள்ளும், பொருள் கெட்டுவிட்ட ஆச்சாரியார்! ஞாயந்தானா! சகித்துக்கொள்ள முடிகிறதா! என்று கேட்கத் தோன்றுகிறது. எனக்குத்தான் அந்த வாய்ப்பும் உரிமையும் இல்லையே, நான் என்ன செய்வது! யாருக்கேனும் இருக்கக்கூடும், அவர்களேனும் கேட்கட்டும்.

ஆச்சாரியார் தரம் கெட்ட நிலையில் இருக்கிறார்—இதை விளக்கக் காமராஜர் கூறுவது, பெரியார் அளவுக்கு இறங்கிவிட்டாரே, என்பது.

இன்னும் வெளிப்படையாகவே பேசத் துணிந்து காமராஜர், தஞ்சையில் சென்ற கிழமை பேசும்போது சொல்கிறார்.

> திராவிடர் கழகம் தேர்தலில் ஈடுபடாமலிருப்பது, என்மீது கொண்ட அன்பு காரணமாக அல்ல! தேர்தலில் நின்றால் தோற்றுவிடுவோம் என்று திராவிட கழகத்துக்கு நிச்சயமாகத் தெரியும். அதனால் பயந்துபோய், புத்திசாலித்தனமாக, தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று திராவிடர் கழகம் சொல்லுகிறது.

இந்தக் கேலி மொழியோ, கருப்பஞ்சாறாக இனிக்கிறது. என் அருமை தி. க. தோழர்களுக்கு! நண்பர்களே! நீங்கள் வலிய வலியச் சென்று வழங்கும் ஆதரவு, காட்டும் பரிவு, சொரியும் அன்பு, பொழியும் பாசம், படைத்திடும் நேசம், என்னவிதமான மனப்போக்கைக் காமராஜருக்கு ஊட்டிவிட்டது, பாருங்கள் என்மீது உங்களுக்கு நிரம்பக் கோபம் இருக்கிறது. நான் அதனை உணருகிறேன், உள்ளம் வருந்தாத நாள் இல்லை—ஆனால் அதன் காரணமாக, காமராஜரிடமிருந்து இத்துணை இழி மொழிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டுமா எண்ணிப் பாருங்கள்,

> ஏதோ நான் தமிழுக்குப்பாடுபடுபவன் என்பதால் பெரியார் என்னை ஆதரிக்கிறார் என்று காமராஜர் பேசியிருக்கக் கூடாதா! பெருந்தலைமை தெரிந்திருக்குமே! கேட்க, இனிக்குமே! அவர்களுக்குத் தேர்தலில் தோல்வி ஏற்படும் என்பது தெரியும்—அதனால் என்னை ஆதரிக்கிறார்கள் என்றல்லவா ஏசுகிறார்.
>
> மருதப்பன். மாப்பிள்ளைத் தோழனாக இருப்பது ஏன் தெரியுமா? இந்த மணப் பெண் மருதப்பனைத் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று கூறிவிட்டாள்—எனவே, மருதப்பன், எனக்கு, மாப்பிள்ளைத் தோழனானான்.

இப்படிக் கலியாண வீட்டிலே பேசினால் போலீஸ் வந்து கலகத்தை அடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்—நாட்டிலே காமராஜர் இதனைப் பதட்டத்துடன் பேசி வருகிறார்—நண்பர்களே! நீங்களோ, நெறித்த புருவத்தினராகிறீர்கள், என்னைக் காணும்போது!!

> யார் அழைத்தார்கள்?
>
> தானாக வந்தார்கள்!
>
> வேறு வழி என்ன இருக்கிறது?
>
> வேறு வேலை என்ன இருந்தது?
>
> சும்மாவா, வந்தார்கள்!

என்று, இந்த ஏச்சு, மளமளவென்று வளரும்—ஒருநாள் உட்கார்ந்து இதற்காக உளம் வருந்த நேரிடும்.

மூவர் முரசு அறைந்ததில் என்னைப் பொறுத்த மட்டில், இந்தப் புதிய கட்டத்தில் காமராஜர் காலடி எடுத்து வைப்பது தெரிகிறது.

> இவ்வளவு அதிகமாக நம்மோடு பயணம் நடத்தியாகிவிட்டது. இனி இவர்களை என்ன கண்டித்தாலும் கோபித்துக்கொண்டு எங்கே போக முடியும்?

என்று காமராஜர் எண்ணிக்கொள்வதாகத் தெரிகிறது.

தம்பி! உள்ளபடியே, காமராஜரின் இந்த இரு தாக்குதலையும் எடுத்துக் காட்டி சில காங்கிரஸ் நண்பர்களே ஏளனம் செய்தனர்; நான் தலையைத் தொங்க விட்டுக் கொள்ளாமல் என்ன செய்வது!

எனவேதான், இத்தாலி நாட்டிலே இரு வெறியர்கள் பல சிறார்களைச் சித்திரவதை செய்யக் கிளம்பிய போது, வீரமாகப் போரிட்ட வனிதை பற்றிப் படித்த போது, எனக்கு, இங்குள்ள அரசியல் சூழ்நிலையும், அதிலே நாம் மேற்கொண்டுள்ள பணியும், நினைவிலே வந்தது—உன்னிடம் சொன்னேன்; வேறு யார் தம்பி, இருக்கிறார்கள் நான் கூறுவதைக் கேட்க!!

அண்ணன்,

அண்ணாதுரை

(11—11—56 திராவிட நாடு இதழில்)

# நெறஞ்ச மனசு!

—இளசை அருணு—

"ஏ...கோபால் ...... என்னடா சொல்றே...? அவ எதுனுச்சும் தப்பு தண்டாவா நடந்திருந்தா ஊர் நியாயத்துக்கு முன்னுடி சொல்றதானேடா...? இப்படிக் கவுந்துக்கினு உட்கார்ந்துக்கிறியே ...ஒரு பொம்மனுட்டியே இப்படித்தான் கைநீட்டி அடிக்கிறதா...? ஏன்டா பதிலே பேசாம கம்முனு'ருக்கிறே...?"

ஊர்க் கவுண்டர் கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தார். அருகே பச்சைப் போர்வையை முகத்தைச் சுற்றி, குளிருக்கு இதமாகத் தோற்றமளித்தார் வெள்ளைக் கவுண்டர்...அவரை யடுத்து பெருமாக் கவுண்டர்.

ஊரில் எந்த நல்லதும்–பொல்லாததும் அவர்கள் முன்னிலையில்தான் துவக்கமாகும்...வேடியப்பன் கோயிலுக்கு பச்சை படைப்பதிலிருந்து, காமன் பண்டிகை நடத்தும்வரை அவர்கள் ஆலோசனைக்குத்தான் ஊரில் மதிப்பு...ஊர் விவகாரங்கள், சோளக் கொல்லையில் களவு போனது, நகை பறிபோன விஷயங்கள், முதலியவை யெல்லாம் அவர்கள் முன்னிலையில்தான் முறிந்து விழவேண்டிய சமாச்சாரங்கள்.

வழக்கம்போல் இன்றும் ராமுக் கவுண்டர் வீட்டுத் திண்ணையில், ஊர் விவகாரங்கள் அரங்கேறின.

ராமுக் கவுண்டர்...

நெற்றியில் சந்தனப் பொட்டு, புகையிலை நெடியேறிய உதடுகள்... கைக்கு ஊன்றுகோலாய் மூங்கில் கொம்பொன்று...ஆனுல் இவற்றையெல்லாம்விட தன்னுடைய நியாயம் வழங்கும் பேச்சால் ஊரே அவருக்கு மரியாதை செலுத்துகிறது...அவர் சொன்ன பேச்சிலிருந்து எள்ளளவுகூட அவ்வூரார்கள் மீறியதில்லை. தேங்காய் உடைப்பதுபோல் நியாயத்தைப் புட்டு வைப்பதில் அவர் சமர்த்தர். அதனுலே அவ்வூராருக்கு அவர்மேல் அளவிட முடியாத மரியாதை—பக்தி...அதனுல் "செல்லம்பட்டி" கிராமத்திலுள்ள துரும்பின் அசைவுகூட வெளியே தலைநீட்டியதில்லை.

ஹரூர்–தீர்த்தமலை செல்லும் ரஸ்தாவில வடதிசையில் ஹரூரிலிருந்து நான்காவது மைலில் அடக்கமாக வீற்றிருக்கும் கிராமம்தான் செல்லம்பட்டி ... மேற்புறம் பெண்ணையாற்றிலிருந்து கோபித்துக்கொண்டு வந்த சிற்றுறு...கீழ்ப்புறம் ஏரிக்கரை...பசுமை அந்த ஊரின் எல்லைகளில் ஆண்டுதோறும் தலைகாட்டுவதில் வியப்பே இல்லை. உழவையே மூலதனமாகக்கொண்ட வேளாளக் குடும்பத்தின் சந்ததியினர்தான் அங்கே வாழ்க்கை ராகத்தை மீட்டிக் கொண்டிருக்கிருர்கள். உழைப்பு அவர்களின் பிராணவாயு. நிலத்திற்கு நெற்றி வியர்வையினைப் பரிசிலாக்கும் அவர்களின் உதிரத் தியாகத்தைக் கண்டு, நிலமாதும் தன்னுடைய பூர்விகக் குழந்தையான சாமை, கேழ்வரகு, சோளப் பயிரை அந்தச் செவிலி மனங்களுக்கு வாரி வழங்குகிருள்.

கரியக் கவுண்டரின் கொல்லைக்குக் கீழ்ப்புறம் நீண்டு படர்ந்து பசுமையாகத் தெரியும், அதோ... அந்த ஒன்னரை ஏக்கர் கேழ்வரகுப் பயிரின் ஏகபோகச் சொந்தக்காரன்தான் கோபால் கவுண்டர்...!

உதயஞாயிறின் ஒளிச்சுடர் அவனின் விழிகளில் படுகின்ற நேரத்தில், அவன் சாலில் நீர் சேந்தி கிணற்றைப் பாதி வற்ற வைத்திருப்பான்.

அதோ...தலையில் ஈயச் சட்டியும், கையில் மூனு வயது குழந்தையையும் அழைத்து வரும் கண்ணம்மா ... கோபால் கவுண்டரின் ஏகபத்தினி...நாட்டுச் சேலை...கலைக் கொட்டு பிடித்து நிலம் திருத்திய பக்குவத்தால் மெருகேறிய ஆஜானுபாகுவான உடல்...காதில் எண்ணையேறிய, அழுக்கேறிய மாஜி தங்கத் தோடு ... எண்ணை கண்டு யுகக் கணக்கான தலை மயிர்.

உழைப்பின் சக்கைப் பிழிவில் தனி மனித அழகு பாதித்துவிடுமா என்ன...? "கண்ணம்மா" அந்த ஊர் நாவுகளில் ஜெபிக்கப்படும் இனிய கச்சாப் பொருள் ...பலரின் கடைக்கண் வீச்சுக்குப் பலியாகித் திரும்பும் ஒற்றை மனுஷி. அவளின் முகஅமைப்பு கோழி முட்டை வடிவமாயினும் உடலமைப்பு பப்பாளிப் பழ நிறம்தான்!

* * *

அவளைக் கோபால் கவுண்டர் கரம் பிடித்ததே ஒரு சிறு காவியம் தான்,

வழக்கம்போல் அந்த ஆண்டும் தீர்த்தமலைத் திருவிழாவுக்கு கோபால் கவுண்டன் சென்றிருந்த போது தீர்த்தகிரியார் கோவில் வாசலில் மாம்பழம் விற்றுக் கொண்டிருந்தாள் கண்ணம்மா. கோபால் தான் பேச்சுக் கொடுத்தான்.

'ரூபாய்க்கு எத்தினி புள்ளே மாம்பழம்...?"

"ஒத்த ரூபாய்க்கு நாலு..."

"ஓ! பழம் பஷ்டா"கீது...ஆனுல் குணம்தான் எப்படியோ......? கோபால் இரு பொருள்படப் பேசினுன்...

"பழம் எந்த ஊர்ப்பழம்...? புளிக்குமா?"

"பழம் கோட்டப்பட்டிப் பழம்... புளிச்சா என் கையை எடுத்திடு..."

கோட்டப்பட்டி குள்ளுகவுண்டர் மரத்துப் பழம்னு......அயோத்தியா பட்டணம், சேலம், சந்தை வரைக்கும் பேரு தெரியுமா...?"

கண்ணம்மாவின் பூர்வீகத்தை மனதில் அசைபோட்டுக் கொண்ட கோபால் கவுண்டர் தன் பெரியப்பனின் தூரத்து உறவை வைத்து 'கண்ணம்மா'வுக்கு பரிசமே போட ஆரம்பித்துவிட்டான். தீர்த்தமலை கோயிலிலேயே கோபால்கவுண்டர் —கண்ணம்மாவின் 'கண்ணுலம்' நடந்தேறியது.

அதெல்லாம் பழங்கதை...

இன்று கீரியும் பாம்புமாக இருவரும் மாறிவிட்டார்கள். காலச் சக்கரம் ஆண்டுப்புள்ளியில் மூன்றை விழுங்கிவிட்டுத் தலைகால்புரியாமல் பறந்துகொண்டிருந்தது. அவர்களின் — கண்ணம்மா — கோபால் கவுண்டரின் தாம்பத்யமளித்த பரிசுப் பொருள்தான் கனகா. எட்டி நடைபயின்று அவ்விருவரின் இதயத்தைக் குளிர்விக்கத் தலை எடுத்த குழந்தைதான் அவள்...

"தூ ...கருமாந்திரம்........எட்டிப் போய் உங்கம்மாவண்டே கொஞ்சு என் காலைக்காலை ஏன் சுத்தறே...?"

"யாருமேலே உள்ள கோவத்தை யார் மேலே காட்டறது...? அரூர் சந்தைக்கு இன்னைக்குப் போனு கொஞ்சம் உண்டை வெல்லம், வாங்கியாரனும்,......நானைக்கு வேடி

யப்பனுக்குப் பொங்கல் வைக்கப் போறேன்...''

''நம்ம இருக்கிற லட்சணத்துக்கு பொங்கல் வைக்காங் காட்டியும் சாமி கோவிச்சுக்கிடாது...''

கோபால் கவுண்டரின் வாழ்வுத் தடத்தில் ஒரு நெருஞ்சி குறுக்கிட்டுத்தான் விட்டதோ? ஆம். அவன் தான் பூவன்...!

பூவன்......அவ்வூரில் இளமை மெருகோடும் இக்கால இளைஞன். ஊருக்கு நியாயம் வழங்கும் ராமுக்கவுண்டரின் ஒரே மகன். அவனுக்கு இன்னொரு பெயரே பள்ளிக்கூடத்தான்........அவ்வூரில் கிழமனுஷிகளோ, வயது முதிர்ந்த ஆடவர்களோ அவனிடந்தான் எழுத்து வாசனைக்கு வரவேண்டும். கடுதாசி ஈழுத, வாசிக்க...இத்யாதி.

பத்தாம் வகுப்புவரை அரூர் ஹைஸ்கூலில் படித்த பெருமிதம் தலைகால் புரியாமல் அவ்வூரில் அவனுக்குப் பெரும்பட்டதாரிப்பட்டயத்தைத் தேடித் தந்துவிட்டது.

கனகாவுந்தான் நாலாவது வயதை நோக்கி அடியெடுத்து வைக்கிருளே? அவளுக்கும் அறிவு வாசனை ஏற்றிவைப்போம் என்பது கண்ணம்மாவின் எண்ணம். கோபால் கவுண்டர் கொல்லைக்குப் போய்விட்ட நேரங்களில், சாமை இடித்தோ கூழ்காய்ச்சி இறக்கிவிட்டோ ஓய்ந்து கிடக்கும் நேரங்களில் பூவன் கனகாவுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க தன் வசிஷ்ட வாயைத் திறந்தான். அதற்காக ஒருநாள் திருவண்ணாமலை சென்று திரும்பியவன் 'அ, ஆ,' படங்கள் போட்ட அட்டையை தன் சொந்தச் செலவிலேயே வாங்கி வந்து விட்டான்.

கண்ணம்மாவும் விட்டுப்போன எழுத்துக்களைத் தொட்டுப் பிடித்து தானும் தன் மூளைக்கு நினைவேற்றிக் கொண்டாள். அவளும் ஏதோ... எழுத்தைக் கிரகிக்கும் மனப்பயிற்சி பெற்றவள்தான்...பூவன் வீடுதேடி வந்து சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தான். கண்ணம்மாவும் இந்த அரிச்சுவடிப் படலத்திற்கு அச்சாணி தூக்கி தன் நாவுகளிலே ஜெபித்துக் கொண்டாள்...

''சே...நம்ம மச்சான்......கொஞ்சமாவது எழுத்து வாசனை இல்லாம இருக்கே......? பூவன் தினம் அரூர் போய் பேப்பர்லாம் வாங்கிக்கினு வந்து வாசிக்கிருரே...?''

பூவனின் நடையும், உழைக்கிற வர்களின் தரத்தைவிட ஓர் படி உயர்ந்த ஆடையும்.........அவளின் இளமைக் கண்களில் குடைராட்டினம் சுற்றின......அவன்கூட ஓரிரு நாளில் அவளுக்கென கண்மை, சாந்து அரூர் டவுனிலிருந்து வாங்கி வர ஆரம்பித்தான்.

முதலில் கனகாவுக்குத்தான் எனப் பூசி மெழுகிய அவன், தற்போது அவளுக்காகவே என வெளிப்படையாக கொண்டை ஊசி? இத்யாதி வாங்கிப் பரிவர்த்தனை செய்து கொண்டிருந்தான்.

கல்வியேற்று படலம்......அரூரில் பார்த்த சினிமாக் காட்சிகளை புட்டு புட்டுவைக்கும் கதா காலட்சேப மாக உருமாறியது.

ஓடாய்த் தேய்ந்த கோபால் கவுண்டரின் உள்ளம் நாளுக்கு நாள் வளரும் இந்த உறவை கண்டு கொள்ளத்தான் இல்லை.

''மச்சான் இன்னைக்கு அரூர்லே... நல்ல படமாம்...நான் போயிட்டு வரவா...?''

''யார் கூடப்போய் வருவே......? நான் இன்னைக்குப் பட்டிக்காவலுக்குப் போகனும்...!''


With the best compliments from:

**Venkateswara Engineering Contractor**

**POLLACHI.**

''பூவன்.........என்னோட வரேன்ணு...''

விஷம் தலைக்கேறியது போல் கர்ஜித்தான் கோபால்...

''என்ன...? அவன்கூட ''ஆட்டம்'' பார்க்கற அளவுக்குத் துணிஞ்சிட்டியா...? தரித்திரம்...காலைமுறிச்சிடுவேன்...அவன் வீட்டாண்டைநீ போகக்கூடாது...போதும்....அவன் நம்ம கனகாவுக்குச் சொல்லிக் கொடுக்கிற லட்சணம்......கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்திடுவேன் போலிருக்கே........நாளைலேருந்து சாமைப் பயிருக்கு காவல் இருக்கணும்...வந்து சேரு...''

உஷ்ணப் பெருமூச்சாய் விட்டு, கோபால் துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வெளியேறினான்.

* * *

''கரியக் கவுண்டன் கொட்டாயிலே பூவனண்டே பேசிக்கிணு'ரிந்தியே...? உனக்கென்ன அவன் கூடப் பேச்சு...?''

கண்ணம்மாவைப் பார்த்துத்தான் கோபால் கேள்வியை வீசினான்.

''நான்...எங்க போனாலும் சந்தேகந்தான்......பூவன் எதுக்கு வந்தாரோ...?''

''...சீ...தடிக் கழுதே...'' கன்னத்தில் விட்ட அறையும்...முதுகில் எட்டி மிதித்த உதையும் சேர்த்து கண்ணம்மாவை பிரக்ஞை இழக்கச் செய்தது...

கோபால் கவுண்டரின் கண் முன்னே பழைய நாட்களின் காட்சிகளெல்லாம் வெள்ளித் திரையில் ஊர்வலம் செல்வதுபோல் குதித்து சென்றன...

''இப்ப என்னுங்க பண்ணச் சொல்றீங்க...? எனக்கு எது நியாயமாப் பட்டுச்சோ அதைத்தான் செஞ்சேன்...நான் காலங் காலமா உழைச்சுப் பயிராக்கின சாமைப் பயிரை எவனுச்சும் திருடிக்கினு போனா கம்முன்னு போறதா...? எனக்குன்னு ஒருத்தி வாழ்க்கைப் பட்டுட்டான்னா அவளை இன்னொருத்தன் பார்த்து பல்லிளிக்க விட்டுடுவேனா...? கொடுவாளாலே ரெண்டா பொளந்து போடமாட்டேன்...நீங்க சொல்லுங்க ... என் வீட்டு வேலியைத் தாண்டிப் பயிரை மேய்ஞ்சவன் யாருன்னு சொன்னா—உங்களண்டே கொண்டு வந்து நிறுத்தினா என்ன தண்டனை கொடுப்பீங்க...?''

ராமுக் கவுண்டர் தலையை நிமிர்த்திப் பேசஆரம்பித்தார்... '...ஏண்டா ...அது யாரு உன் சோத்திலே மண்ணை அள்ளிப் போட்டாங்கிறதே சொல்லேன்...ஏன்...பொத்தி பொத்திப் பேசிக்கினுருக்கிறே...''

''...அதைஎப்படிங்க இந்த இடத்திலே சொல்றது...? ஊருக்கெல்லாம் நியாயஞ் சொல்விங்களே... உங்க பையன் ...... பூவன்தான் ... ஏதோ...நாலு எழுத்துப் படிச்சிருக்கேன்ற திமிர்லே...என் பொஞ்சாதியண்டே பல்லைக் காட்டி மயக்கிருக்கிறான்...அந்தச் சிரிக்கியும் ... ஊர் நடப்புத் தெரியாம ...... டவுன்லே போற பொம்மனாட்டி மாதிரி தன்னை மாத்திக்கினு...எனக்குக் கொஞ்சம் கூட மதிப்புக் கொடுக்காம நடந்துக்கிட்டா.

சினிமாவுக்குப் போறதும், நோட்டு எடுத்து எதுனாச்சும் எழுதறதும்...உங்க புள்ளையாண்டான் சொல்லிக்கொடுத்த பாடம்...... பாலாய் இருந்த அவமனசை நஞ்சாக்கிட்டான் பூவன்......அவனைச் சொல்லாம என்னைக் கண்டிக்க வந்துட்டீங்க. என்னோடதை...... எனக்கின்னு இருக்கிற பெண்சாதியைத்தான் அடக்க முடியும்...... ஊரைத்திருத்த—உங்க பையனையும் திருத்த என்னால் முடியுமா? என் வாழ்க்கையிலே நெருஞ்சி முளைக்க வைச்சிட்டானே? உங்க பையன்?''

ஊர்க்கவுண்டர் திகைத்துப்போய் கோபாலின் அழுகுரலைக் கேட்டுக் கொண்டிருந்தார்......

''டே......கோபாலு........மோசம் போயிட்டியேடா...அடே......அவ கரியக்கவுண்டன் கிணத்துலே பொணமா மிதக்கிறாடா.''

உரக்கக் கூவிக்கொண்டே கோபாலின் பெரியம்மாதான் பரக்கப் பரக்கத் தலைவிரி கோலத்துடன் ஓடிவந்தாள். ஊர்க்கூட்டம் எல்லாமே எழுந்து ஓட ஆரம்பித்தது.

மெதுவாகத் தூக்குடா...பாவி... இப்படியா ...... மனஸ்தாபப்பட்டுக்கினு உயிரை முடிச்சுக்குவா.....பல குரல்கள் அனுதாபக் கோரஸ் பாடின. அவனுக்கென எடுத்துச் செல்லும் தூக்குச்சட்டியை எடைக் கல்லாக வைத்து கீழே ஓர் துண்டுக் கடிதம் ஊசலாடிக்கொண்டிருந்தது...

மச்சான்!

என்னை மன்னிச்சுடு. உயர் நாகரிகத்தைவிட உன்நெறஞ்ச உள்ளம்தான் பெரிசுங்கறதே இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டேன். புரிஞ்சப் பிறகு வாழற தைரியம் எனக்கில்லை...நடந்ததெல்லாம் கனவா நெனச்சுக்கிட்டு என் ''கனகா''வுக்கு நல்ல வழிகாட்டு. உன்னோட நிழல்லே வாழ முடியாத அபலை.

கண்ணம்மா.

மாஜி ''கண்ணம்மா''வைச் சுற்றித் தன்னுடைய அனுதாப வலையங்களைவிட்டுச் சென்றார்கள் செல்லம் பட்டி வாசியார்.

அதோ...! பூவனும் கண்ணீர் வடிக்கிறான்.

''ஏம்பா...நீ அடிச்சதுனாலே தான் அம்மா இப்படித் தூங்குறாளா...?'' கனகா ஒரு கேள்வியைத் துணையாக்கிக் கொண்டு கோபாலிடம் சீண்டிக் கொண்டிருந்தாள்,

கண்ணம்மாவின் ''முடிவின் ஆரம்பம்'' அவளுக்குத் தெரியவில்லையோ என்னவோ...?

★

## அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா அவர்களின்

## இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது

என்ற தம்பிக்கு மடல் இடம் பெறுகிறது.



# சமுதாயச் சிந்தனைகள் (6)

அன்புள்ள நண்பா!

ஆத்திகக் கருத்துக்களும், அதனை எதிர்க்கும் அறிவுக் கருத்துக்களும் மனிதனது சிந்தனைக்குக் குழப்பத்தை யேற்படுத்துவதுடன், போட்டியில் ஆத்திகக் கருத்துக்களே பெரும் வெற்றியினை ஈட்டிக் கொள்கின்றன என்றேன்.

மதத்தின் அடிப்படையில் பிறப்பெடுக்கும் ஆத்திகக் கருத்துக்கள், மனிதனை சுதந்திரத் தன்மையுடன் செயல்பட முடியாதவனாக மாற்றி அமைப்பதுடன், தான், அறிந்தோ அறியாமலோ விரும்பியோ, விரும்பாமலோ ஏதோ ஒரு சக்திக்கு அல்லது பழக்க வழக்கத்துக்கு அடிமையாக இருந்து இயங்க வேண்டியவனாக மாற்றிவிடப்படுகிறான்.

வாழ்க்கையினைக் கழிக்க மட்டுமே போராடவேண்டியவனாக இருப்பவன், மத அடிமைத்தனம் காரணமாக சுற்றுச் சார்புகளுடனும் போராட வேண்டியவனாக ஆகும்போது அவன் சமுதாயப் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டியவனாகி விடுகிறான்.

சமுதாயத்தையும் தன் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், மனிதனை, கோயில், குளம், திருவிழா, பண்டிகைகள், நோன்புகள், விரதங்கள் என்று அவனது பகுத்தறிவுக்கு மாறான நடைமுறைகளையும் கைக்கொண்டு ஒழுக முற்படும் போக்கு நீதி, அநீதி ஆகியவற்றுக்கும் இலக்காகி, முறையாக தன்னை வழிநடத்திக்கொண்டிருக்கும்போது சமூக நீதிக்கு உட்பட்டவனாகவும், முறையாக வழி நடக்க முடியாமல் தடம் புரளும்போது சமூக அநீதி என்ற விமர்சனத்துக்குரியவனாகவும் ஆக்கப்படுகிறான்.

இதயம் தூயதாக இருக்கவேண்டும் என்ற தத்துவத்திற்காகவும், இதயத் தூய்மையின் மூலமே இறைவன் அருளைப் பெற முடியும் என்ற போதனைக்காகவும் தரப்பபட்ட ஆத்திகக்கருத்துக்கள், மதம் தன் விருப்பம் போல் மனிதனை ஆட்டிப்படைக்கப் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன.

தான் இன்ன மதத்தைச் சார்ந்தவன் என்று எடுத்துக்காட்டிக்கொள்வதிலே ஒருவித பெருமைகூட மனிதனுக்கு ஏற்பட்டுவிட்டது. மத அடிமைத்தனம் காரணமாக தான் சமூகத்தில் செயல்படுத்தவேண்டிய பல செயல்களைச் செய்யாதுவிட்டான். அவற்றின் எதிரொலிகள் மதவாதிகள் எனப்படுவோரைவிட, தனி மனிதனை மிகவும் பாதிக்கத் தொடங்கியது. இதுவே நாளாவட்டத்தில் மனிதக் குழுவை—மனித சமுதாயத்தைப் பாதித்தது; சமூக அநீதிகள் மலிந்தன என்று வெளிப்படையாக சிந்தனையாளர்களால் கூறப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் மாறுபட்டன.

சென்ற இதழில் காட்டியதுபோல எப்படியாவது வாழ்வது என்ற நிலைமைக்கோ, அல்லது இப்படித்தான் வாழ்வது என்ற தத்துவத்திற்கோ இதுவரையில் யாரும் எந்த விதமான வரம்பும் காட்டி விளக்கமளித்திருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், பொதுவாக வாழ்க்கை என்றால் என்ன? அது எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதற்கு மட்டுமே சிலர், அவ்வப்போது விளக்கமளித்துப் போயிருக்கிறார்கள். அளிக்கப்பட்ட அந்த விளக்கங்கள் அரியனவாய் இருந்தாலும்கூட அகத்திலேற்றிக் கொண்டு ஒழுக மனித சமுதாயத்துக்கு முடியாமல் போய்விட்டிருக்கிறது.

இந்த முடியாத நிலைமைக்கு, மதக் கோட்பாடுகள் ஒரு வகையில் காரணமாய் அமைந்துவிட்டிருந்தாலும், பெரும்பாலும் பொருளாதாரச் சூழ் நிலைகளே மையஇடத்தைப்பற்றிக்கொண்டு அப்படி மனித குலத்தை ஆக்கிவிட்டிருக்கிறது என்று நம்பவேண்டும். அத்துடன் அரசியல் குரலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலைமை உண்டாக்கிவிடப்பட்ட பின்னர், அரசியலும் தன் இஷ்டப்படி சமூகத்தை வளைத்துக்கொள்ளத் தொடங்கி இருக்கிறது.

ஆக, இப்படி இப்படி வாழவேண்டும் என்று நெறிப்படுத்திக்கொள்வது, தனி மனிதன் ஒவ்வொருவனுடைய கடமையாகவிடப்பட்டுவிட்ட பின்பு, பரபரப்புக்கு ஆட்பட்டுவிட்ட தன்மையிலிருந்து மனிதகுலம் தனியாகப்பிரிந்து செயல்பட முடியாதுதான். அவனவனுக்கு வாழும் முறையும், நெறியும் எப்படி எப்படி தோன்றுகிறதோ, அப்படி அப்படி வாழ்வோம் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்ட பின்னர், சமூகத்தில் அநீதிகள் மலியாமல், கட்டுக்கோப்புடன் இயங்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

உலக நடப்புக்களைப்பற்றி ஒருவன் விமர்சித்து, தீர்ப்பும் உரைக்கின்ற அளவுக்கு இன்று அறிவு வளம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. நல்கப்படுகின்ற தீர்ப்பினை, இன்னொருவன் ஏற்றுக்கொள்கின்றானோ இல்லையோ, அந்த தீர்ப்புரைகள் பற்றி வையத்தார் என்ன கருத்தறிவிக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் நினைந்து பார்க்கப்படுகிறதோ இல்லையோ இன்று தனிமனிதன், தன் எதிரே உள்ள உலகம் பற்றியும் உலக நடப்புக்கள் பற்றியும் நிச்சயம் விமர்ச்சித்துக் கொண்டுதான் வருகிறான்.

உலக நடப்புக்கள் பற்றிய தனிமனித விமர்சனம் நேற்றுவரை இல்லையென்றே நம்பப்படுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்புதான் இப்படியொரு பொதுத் தன்மை, உலகத்தின் அத்தனைப் பகுதியிலும் ஏற்பட்டு விட்டிருப்பதாக பேரறிஞர் செஸ்டர்பௌல்ஸ் தம் ஒரு நூலில் குறிப்பிடுகிறார்.

உலகத்தின் எந்தப் பகுதியில் என்ன நடக்கிறது? விளைவுகள் எப்படி எப்படி இருக்கும் என்கிற அளவுக்குத் தனி மனிதன் ஒருவன் விமர்சிக்கத் தொடங்கி இருக்கிறான் என்றால், அந்த அளவுக்கு அவனது அறிவு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதுதான் பொருளாக இருக்கவேண்டும்.

ஆனால் உலக நடப்புக்கள் மீது ஆர்வம் காட்டி உரையாடத் தொடங்கும் அளவு அறிவு வளர்ந்துவிட்டிருப்பவன்கூட, சமுதாயத்தில் எத்தனையோ தீங்கான காரியங்களைச் செய்யத் தயங்குவதில்லை. செய்துவிட்ட பின்பு தரப்படுகின்ற விளக்கம், 'எல்லாம் வயிற்றைக் கழுவிக்கொள்ளவே'' என்கிற தத்துவமாக இருக்கவும் காண்கிறோம். தத்துவம் சரியானது என்று ஏற்றுக் கொள்ள முடியும்; அதற்காக அவன் மேற்கொண்ட வழிகளைச் சரியானது என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

சென்ற கிழமை இந்தியத் தலைநகரில் சுவையானதொரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறதை செய்தி இதழ்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கின்றன.

இந்தியத் தலைநகரான டில்லியில்தானே இந்திய மாநிலங்கள் அனைத்தையும் ஆட்டிப்படைக்கின்ற அதிகாரங்களைச் சுமக்க முடியாத அளவுக்குச் சுமந்து கொண்டுள்ள மத்திய அரசும், அதன் அமைச்சர்களும் இருக்கின்றனர். இராணுவமும், போலீஸ் படையும் அங்குதானே வலிய கரங்களுடன் உலா வந்துகொண்டிருக்கிறது. மனிதன்மீது நம்பிக்கையில்லை என்பதனைப் பறைசாற்றுபவைகள் அல்லவா இராணுவமும் போலீசுப் படையும், அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும்!

இவ்வளவும் விழித்துக்கொண்டிருந்த வேளையிலேதான் டில்லியிலே அது நடைபெற்றிருக்கிறது.

நடைபெற்ற நிகழ்ச்சியின் தத்துவத்தைக் குறை கூற முடியாது. வயிற்றுப்பாட்டோடு ஒட்டிய தத்துவம் அது. வாழ்க்கைக்கான உயரிய தத்துவம் அது. ஆனால் நண்பா அந்த தத்துவத்தின் வெற்றிக்காக மேற்கொண்ட முறைகளை நீ அறிந்து கொண்டிருக்கிறாயே! சரியான நடைமுறை என்று உன்னால் ஒப்புக்கொள்ள முடிகிறதா?

முதலாளி—தொழிலாளி என்பவர்கள் சமுதாயத்தில் முக்கியமான அங்கம் வகித்துக் கொண்டிருப்பவர்கள். இந்த அங்கம் பற்றி பிரிதோர் சமயம் விரிவாக ஆராயலாம். இப்போது, தொழிலாளர்கள், ஒருவேலையில் ஒரு முதலாளியினால் நியமிக்கப்படும்போது, அந்த வேலையினைச் செய்யாது சோம்பித்திரிந்துவிட்டு, நேரத்தை அரசியல் உரையாடல்களிலும் உரிமை வேட்கைகளிலும் கழித்துவிட்டு வாளாவிருந்தால், எந்த முதலாளிதான் அந்த தொழிலாளியை வேலையில் வைத்துக் கொண்டிருக்கச் சம்மதிப்பான்?

வேலையினைச் செய்யாது சோம்பித்திரிந்த காரணத்துக்காக ஊதியத்தைப் பிடித்துக்கொள்ள முன் வந்தது மட்டும் எத்தனையோ பெரியமனம் என்று ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அவ்வளவு பெரிய மனம் படைத்த நிர்வாகத்தைக் 'கேரோ' செய்து கட்டிடத்

With the best compliments from:

**Shantidev Genearl Supply Syndicate,**

**MADRAS-7.**

த்தையும் பூட்டி—உள்ளே நிருவாகிகளையும், அதிகாரிகளையும் வைத்து—பூட்டிய அந்தக் கட்டிடத்துக்குத் தீயும் வைக்க முனைந்திருக்கிறார்கள் தொழிலாளர்கள் என்றால், அந்தத் தொழிலாளர்களது இதயம் எவ்வளவு சிறியது? கீழானது? கேவலமானது என்று நம்மால் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியுமா? ஒரு நீதியைப் பெற மேற்கொண்ட நடவடிக்கையில் ஏதாவது துளி அளவுக்காவது நியாயம் இருப்பதாக ஒப்புக்கொள்ள முடிகிறதா? சரியான நடைமுறையா இது?

உலகத்தைப் பற்றி மட்டுமே விமர்சிக்க முடிந்தவர்களால், தங்கள் உள்ளத்தைப் பற்றி விமர்சிக்க முடியாமல் போனதின் காரணம் அல்லவா இந்த கேடு! பொருளாதார வல்லுநர்களும், அரசியல் மேதைகளும் மட்டுமே 'பரந்த கண்ணோட்டம்' என்பதன் பேரால் இதுபோன்ற 'வெளிவிவகாரங்கள்' பற்றிய விமர்சனத்தில் ஈடுபட்டிருந்த காலம் ஒன்றுண்டு. இன்று அனைவரும் உலகை அறிந்து வைத்துக் கொண்டிருக்கிற அளவுக்கு அத்தனை மனிதனும் அறிவு வளர்ச்சியில் மேம்பட்டிருக்கக் காண்கிறோம்.

அறிவு எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது என்று ஏற்றுக்கொள்ள முடிகிறதோ—அந்த அளவுக்குப் பயன் கிடைத்திருக்கிறதா? என்ற வினா, நெடுங்காலத்துக்கு வினாவாகவே விடப்பட்டிருக்கும்.

எனவே சமுதாயத்தில் மனிதன் புறச்சூழல்களில் பெரிதும் அக்கறை காட்டுகிறபோக்கு வளர்ந்து வந்திருக்கிறது. அகச்சூழல்கள் பற்றி எண்ணிப்பார்ப்பதில்லை என்றும் பெறமுடிகிறது.

அகச் சூழல்கள் பற்றி எண்ணிப்பார்க்க முடிந்தவனானால், சமூக அநீதிகள் மலிந்துவிட்டன என்ற குற்றச் சாட்டுக்குப் பதில் சொல்லத்தனிமனிதனால்கூட முடியும். இன்று முடியுமா?

எண்ணிப்பார்க்க முடிந்தவனானால் மதக் கருத்துக்கள், கோட்பாடுகள் பற்றி இதுநாள் வரையில் அவன் முடிவுக்கு வந்திருக்கவேண்டும். சீர்திருத்தவாதிகளின் செறிந்த பேச்சுக்களுக்கும், கருத்துக்களுக்கும் பயன் கொடுத்திருக்க முடியும். செய்திருக்கிறானா?

நண்பா! மதத்தத்துவம் என்பதனை, நெற்றியில் நீறு பூசிக்கொள்வதனையே,ா கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவதனையோ, பூசை, புனஷ்காரங்களையோ நான் குறிப்பிடுவதாக நினைக்கக்கூடாது.

இனம்புரியாத—விவரிக்க முடியாத ஏதோ ஒரு மடமைத்தனம் மனிதனைக்கப்பிக்கொண்டிருக்கிறது. அந்த மடமைத்தனம் சங்கிலித்தொடர்போல ஒருவனை ஒருவனோடு பிணைத்து வைத்திருக்கிறது. தேவையில்லாத பல நடைமுறைகளுக்கு மனிதனை ஆட்படுத்தி வைத்திருக்கிறது.

அழகு!
இன்பம்!
மகிழ்ச்சி!
அன்பு!

இவைகளுக்கு யாராவது பொருள்கூறமுடியுமா? அழகு என்று கூறும்போது அது இப்படி இருக்கக்கூடும் என்று உணர்ந்துகொள்ள நம்மால் முடிகிறது. இங்கிலாந்து நாட்டு அரசி எலிசபெத் மிக்க அழகுடையவர் என்கிறபோது ஒருவிதமான அனுமானத்தை நாம் ஏற்படுத்திக்கொள்கிறோம். அதேபோல் கென்னடியின் மனைவி ஜாக்குலின் அழகானவள் என்கிறபோதும் அனுமானித்துக்கொள்கிறோம். எலிசபெத் அரசியின் அழகோ ஜாக்குலின் ஒனாசிசின் அழகோ எப்படிப்பட்டது என்றுரைக்க எவரால் ஆகும்? இது போன்றதுதான் இன்பம்! என்பதும். மகிழ்ச்சி, அன்பு முதலானவைகளும் இதுபோலவே அனுமானத்தின் அடிப்படையில் உணர்ந்துகொள்ள வேண்டியவையே.

இதுபோல்தான் மதம் என்கிறபோதும், அது எப்படிப்பட்டது என்றும், எப்படி இருக்கும் என்றும் ஏதோ ஒன்றை அனுமானித்துக் கொள்ளத்தான் முடிகிறது. இதுதான் மதம் என்று தெளிவாக விளக்கமளிக்க முடியாது. முடியும் என்போர், கொள்கை, கோட்பாடுகளை மட்டிலுமே மதம் என்று வாதிக்கிறார்களே ஒழிய, மதம் என்ற சொல்லின் தனித்தன்மைகளை விளக்க முனைவதில்லை; முடிவதும் இல்லை.

அனுமான வடிவத்திலே இருந்துகொண்டிருக்கும் மதத்தின் தத்துவங்கள், மனிதனுக்கு வழிகாட்ட வேண்டுமாம்! வழிகளும் காட்டிக்கொண்டிருக்கிறதாம்! மனிதனும் அவற்றை அனுமான வடிவத்திலேயே ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கென்று வகுக்கப்பட்ட சில கொள்கை, கோட்பாடுகளுக்கு ஆட்பட்டுக் கொண்டும் வருகிறான்.

இவ்வாறு ஆட்பட்டு ஒழுகும் சில பல கொள்கைகள், கோட்பாடுகள் நல்ல பாதையையும் காட்டுகின்றன. அறிவுக்குப் புறம்பானவைகளையும் காட்டுகின்றன. இடையேதான் சீர்திருத்தவாதிகளது கருத்துக்களும் முட்டி மோதிக்கொண்டு வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் வெற்றியும், பல சமயங்களில் தோல்வியும் பெறுகின்றன.

ஆனால் இவை அனைத்துமாகக் கூடினாலும், மனித குலத்தை இந்த வழியில்தான் நடந்துசெல்ல வேண்டும் என்று திட்டவட்டமான ஒரு பாதையைக் காட்ட முடியவில்லை. அதனாலேயே மனிதன், மதக் கருத்துக்களுக்கோ, ஆத்திகக் கோட்பாடுகளுக்கோ அன்றி புரட்சி நோக்கங்களுக்கோ ஆட்பட்டிருந்தாலும் வாழும் வழி என்கிறபோது இப்படித்தான்—என்றோ, எப்படியாவது—என்றோ அவனவனே தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். டில்லிகள் மலிகின்றன. 'கேரோ'க்கள் பிறக்கின்றன். வேலை நிறுத்தங்கள் உண்டாகின்றன. வழிப்பறிகள், கொள்ளைகள் ஏற்படுகின்றன. கொலைகளையும் தவிர்க்க முடிவதில்லை.

வாழும் முறைக்கு வழிவகுக்க முடியுமா? இந்த வகையில் வாழ்க்கை அமையவேண்டும் என்று பொதுவாக நெறிப்படுத்திக்கொள்ள முடியுமா? பிறகு பார்ப்போம்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.